திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2020, விலை ரூ.5/-



2020, ஏப்ரல் 02 முதல் 10 வரை

## ஒண்டிமிட்டா

## ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## நாகுலாபுரம்
## ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 2020, மே 05 முதல் மே 13 வரை

**05-05-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**06-05-2020**
**புதன் கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**07-05-2020**
**வியாழக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**08-05-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**09-05-2020**
**சனிக்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**10-05-2020**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : ஹனுமத் வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**11-05-2020**
**திங்கட்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**12-05-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**13-05-2020**
**புதன் கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



*அந்யே ச ப$_3$ஹவ: சூரா*
*மத$_3$ர்தே$_2$ த்யக்தஜீவிதா: |*
*நாநாசஸ்த்ரப்ரஹரணா:*
*ஸர்வே யுத்$_3$த$_4$விசாரத$_3$ா: ||*

**எனக்காக உயிராசையை விட்டவர்களான வேறு பல சூரவீரர்களும், பற்பல அஸ்திர–சாஸ்திரங்களுடன் தயாராக நிற்கின்ற அனைவருமே யுத்தத்தில் திறமைப் பெற்றவர்கள்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–9*



*பாராவார பயோ*
*விசோஷண கலா*
*பாரீண காலாநல-*
*ஜ்வாலா ஜால விஹார*
*ஹாரி விசிக*
*வ்யாபார கோர க்ரம: |*
*ஸர்வாவஸ்த்த ஸக்ருத்*
*ப்ரபந்ந ஜநதா*
*ஸம்ரக்ஷணைக வ்ரதீ*
*தர்மோ விக்ரஹவாந்*
*அதர்ம விரதிம்*
*தந்வீ ஸ தந்வீத ந: ||*

*- ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரம்*

**கடலின் நீரை வற்றச் செய்யும் கலையில் வல்லமையுடையதாய், ப்ரளய காலத்து அக்நியின் ஜ்வாலைக் கூட்டத்தின் விளையாட்டை வெல்வதாயுள்ள, அதற்கும் மேலான, அம்புகளின் செயல்களின் கொடிய முறையுடையவனாய், எந்த நிலையிலுமுள்ள ஒரு முறை சரணமடைந்த சேதநக் கூட்டத்தை காத்தலையே முக்கிய விரதமாக வுடையனாய், உருவமெடுத்து வந்த தர்மமாயுள்ளவனாய், ஒப்பற்ற வில்லாளனாயுள்ள அந்த இராமபிரான் நமக்கு அதர்மத்தின் ஒழிதலை செய்தருள வேண்டும்**

## ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி/ஸ்ரீசார்வரி வருடம், பங்குனி/சித்திரை மாதம், உத்தராயணம் சிசிர/வஸந்தருது, சகவருஷம் 1941-42, கலியுகாதி 5120/21, ஏப்ரல் 2020

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 19 | புதன் | அஷ் | திரு | மாத துர்காஷ்டமி, கரிநாள், ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 2 | 20 | வியா | நவ | புன | ஸ்ரீராமநவமி, திருமலையப்ப ஸ்வாமி ஆஸ்தானம், ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், கார்வேடி நகரம் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 3 | 21 | வெள்ளி | தச | பூச | தர்மராஜ தசமி, ஸ்ரீராமபட்டாபிஷேகம், ஆஸ்தானம், வால்மீகிபுரம் (வாயல்பாடு) ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி கருடசேவை, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 4 | 22 | சனி | ஏகா | ஆயி | காமத ஏகாதசி, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பட்டாபிஷேகம், வால்மீகிபுரம் (வாயல்பாடு) ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 5 | 23 | ஞாயிறு | துவா | மக | வாமனத்வாதசி, பிரதோஷம், திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம், திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம், பெங்களூரு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம். |
| 6 | 24 | திங்கள் | திர | பூர | தனியநாள், ஸ்ரீசால நாச்சியார் சாத்துமுறை, வால்மீகி புரம் (வாயல்பாடு) ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி திருத்தேர். |
| 7 | 25 | செவ் | சசி | உத் | பௌர்ணமி, தும்புரு தீர்த்த முக்கோட்டி, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம், திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம் நிறைவு, பெங்களூரு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்தஸவம் நிறைவு, வால்மீகிபுரம் (வாயல்பாடு) ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பூலங்கி சேவை, கருட சேவை. |
| 8 | 26 | புதன் | பௌ/பிர | ஹஸ்/சித் | க்ஷய திதி, ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருத்தேர். |
| 9 | 27 | வியா | துவி | சுவா | சுபநாள், சைத்రபஹுள. |
| 10 | 28 | வெள்ளி | திரி | விசா | ஆடைகள் தயாரிக்க, ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 11 | 29 | சனி | சது | அனு | சங்கடஹர சதுர்த்தி, வ்ய-சிரா., ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி புஷ்பயாகம். |
| 12 | 30 | ஞாயிறு | பஞ் | கேட் | ... |
| 13 | 31 | திங்கள் | சஷ் | மூல | சஷ்டி, மேஷ சூரியன், இ.8ம.23நி., கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி வஸந்தோத்ஸவம் ஆரம்பம். |
| 14 | 1 | செவ்வா | சப் | பூராட | தமிழ் வருடப் பிறப்பு விஷுபுண்ணிய காலம் |
| 15 | 2 | புதன் | அஷ் | உத்ரா | காலாஷ்டமி, கார்வேடி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி வஸந்தோத்ஸவம் நிறைவு. |
| 16 | 3 | வியா | நவ | திஓ | ச்ரவணம், தனியநாள். |
| 17 | 4 | வெள்ளி | தச | அவிட்ட | ..... |
| 18 | 5 | சனி | ஏகா | சத | வருதினி ஏகா. |
| 19 | 6 | ஞாயிறு | துவா | பூரட் | கரிநாள், பாஷ்யகாரர் உத்ஸவமாரம்பம். |
| 20 | 7 | திங்கள் | திர | பூரட் | சோமப் பிரதோஷம், |
| 21 | 8 | செவ் | சசி | உத்ரட் | மாதசிவராத்திரி, வைத்சிரா. |
| 22 | 9 | புதன் | அமா | ரேவ | சர்வ அமாவாசை. |
| 23 | 10 | வியா | அமா | அஸ்வி | வாஸ்து கா.8.58-9.54. |
| 24 | 11 | வெள்ளி | பிர | பர | வைசாக சுத்த, சந்திர தரிசனம். |
| 25 | 12 | சனி | துவி | கார் | கிருத்திகை, ஸ்ரீபரசுராம ஜெயந்தி. |
| 26 | 13 | ஞாயிறு | திரு | ரோகி | அக்ஷய திருதியை, ஸ்ரீபிருகு மஹரிஷி திருநட்சத்திரம், நாராயணவனம் ஸ்ரீமரகதவல்லி சமேத ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 27 | 14 | திங்கள் | சதுர் | மிருக | மாத சதுர்த்தி, மதுரகவியாழ்வார் உத்ஸவமாரம்பம், நாராயணவனம் ஸ்ரீமரகதவல்லி சமேத ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 28 | 15 | செவ்வா | பஞ் | திரு | ஸ்ரீ சங்கரர், ராமாநுஜர் ஜயந்தி, கரி நாள், பாஷ்யகாரர் சாத்துமுறை. |
| 29 | 16 | புதன் | சஷ் | புன | சஷ்டி, திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி புஷ்பயாகம், முதலியாண்டான் திருநட்சத்திரம், கீலபட்லா ஸ்ரீகோனேடி ராய ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 30 | 17 | வியா | சப் | பூச | கீலபட்லா ஸ்ரீகோனேடி ராய ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |





*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

*பிரதான ஆசிரியர் :*
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.

*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
தி.தி.தே. திருப்பதி.

*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

***பிரதிகளுக்கு:***
**THE CHIEF EDITOR,**
**"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.-பிரதான ஆசிரியர்


மலர் 50

## உள்ளுறை

இதழ் 11


பக்கம்

**பச்சை தோரணம் : வேதாந்த தேசிகன் அருளிய ரகுவீர கத்யம்** 7
*- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.*

**முன்வினை களையும் இராமாநுஜ நூற்றந்தாதி** 12
*- திரு. எம்.எஸ். லக்ஷ்மி நாராயணன், திருவள்ளூர்.*

**அற்புதங்கள் புரிந்த ஞானகுரு ஆதிசங்கரர்** 15
*- திரு. ஆர். வெங்கடரமணன், தர்மபுரி.*

**திவ்விய திருத்தலம்–திருமலை** 17
*- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.*

**அன்னமய்யா வாழ்க்கை வரலாறு** 20
*- திருமதி ராதாராமநாதன், திருப்பதி.*

**தாச சாகித்தியத்தில் திருவேங்கடவன்** 24
*- திருமதி பா. காயத்ரி, கேரளா.*

**ஸ்ரீபகவத் ராமாநுஜரும் வைணவப் பெண்களும்** 31
*- திரு. வி. சீனிவாசன், இறவாங்குடி.*

**அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : இல்லறமே நல்லறம்** 34
*- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*

**அம்மி மிதித்து அருந்ததி பார்த்து...** 37
*திரு. எம். இராதாகிருஷ்ணன், வாணியம்பாடி.*

**ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–சித்திரகேதுவின் கதை** 38
*- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.*

**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 41
*- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*

**108 திவ்யதேச வைபவம் – திருவைகுண்டம்** 44
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*

**பகவத் கீதை–இளைய சமுதாயம் – உனது இன்பதுன்பத்திற்கு நீயே காரணம்** 48
*- திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா.*

**ஆயுர்வேதம் – எலுமிச்சை** *- திருமதி. வி. உஷா, திருப்பதி.* 50

**2020, ஏப்ரல் மாத ராசி பலன்** 52
*- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.*


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : **ஸ்ரீசீதாலக்ஷ்மண உடனுறை ஸ்ரீகோதண்டராமஸ்வாமி, ஒண்டிமிட்டா.**

பின்னட்டை : **ஸ்ரீசீதாராம பட்டாபிஷேகம்.**



உங்களுடன்...

# ஸ்ரீராமாயண மகாகாவிய அவதாரம்

*"உலகம் யாவையும், தாமுள ஆக்கலும்*
*நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா*
*அலகிலா விளையாட்டுடையார் அவர்*
*தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே"*

இராமாயணத்தைப் போன்று உலக செயல்பாட்டினை பற்றி விரிவாகக் கூறும் காவியம் வேறொன்று இல்லை, இதனைப் போன்று வேறெங்கும் காணவும் முடியாது. ஆதிகவி வால்மீகி முதற்கொண்டு இன்று வரை இராம கதை பல மொழிகளில், பல வடிவில் தோன்றியுள்ளது. இது நம் இந்திய திருநாட்டில் மட்டுமின்றி, இந்தியர்களின் பண்பாட்டு கலாச்சாரம் பரவியுள்ள பல்வேறு நாடுகளிலும் புகழ் பெற்று விளங்குகிறது.

இராமாயணம் ஆதிகாவியம், வால்மீகி மகரிஷி இந்த மகாகாவியத்தை படைக்கக் காரணம் பிரம்மதேவனின் அனுக்கிரகமேயாகும். அந்த மாமுனி நதியில் நீராடுவதற்குச் செல்லும்போது, அந்நதிக் கரையில் ஒரு காட்சியைக் கண்டார். மரத்தின் கிளையின் மீது விளையாடிக் கொண்டிருந்த க்ரௌஞ்சப் பறவையில் ஆண் பறவை, வேட்டைக்காரன், எய்திய அம்பினால் காயமடைந்து தரையில் வீழ்ந்து துடிதுடித்து உயிரை விட்டது. அதனைக் கண்டு பெண் பறவை அழுது கொண்டிருந்தது. அதனைக் கண்ட முனிவரின் இதயமும் கலங்கிற்று. அவருடைய இதய சோகமே சுலோகமாக மாறிற்று.

*"மா நிஷாத! ப்ரதிஷ்டாம் த்வ மகம ஸ்ஸாஸ்வதீஸ்ஸமா:*
*யத் க்ரௌஞ்சமிதுநா தேக மவதீ: காமமோஹிதம் "*

"ஓ வேடுவனே! புணர்ச்சியில் இருந்த க்ரௌஞ்ச பறவைகளில் ஒன்றினைக் கொன்ற நீ நீண்ட காலம் வாழ முடியாது". இது வேடுவனுக்கு அளித்த சாபம் மட்டுமல்ல. இச்சுலோகத்தில் இராமாயண கதை விளக்கத்தின் உட்பொருளும் அடங்கி உள்ளது. அப்பொழுது பிரம்ம தேவன் தோன்றி, "உன் நாவில் சரஸ்வதி தேவியே குடி கொண்டிருக்கிறாள். எனவே நீ இராமாயணத்தை இயற்று. அது இப்பூமியில் நிரந்தரமாக இருக்கும்" என்று கூறினார்.


வால்மீகி மாமுனிக்கு "மா நிஷாத" எனும் சுலோகம் உச்சரிக்கும் முன்வரை லௌகீக இலக்கியத்தில் ஈடுபாடற்று இருந்தார். இராமாயண காவியம் தோன்றுவதற்கு இந்த பறவைகளின் கதையே காரணமாய் விளங்கிற்று. வால்மீகியும் ஆதிகவியாக பெயர் பெற்றார். தெய்வீக கவிதைகளால், மகாசித்தியை அளிக்கக் கூடிய மகாகாவியமாக மலர்ந்தது ஸ்ரீராமாயணம். இராமாயணம் படிப்பதினால் பெற்றோரிடம் பக்தி, சகோதர பாசம், பெரியோரிடம் மதிப்பு, மரியாதை, வாத்ஸல்யம், சௌசீல்யம், சித்தசுத்தி, பரோபகார புத்தி முதலான எண்ணற்ற நற்குணங்கள் உதயமாகும்.

இந்துக்களாகிய நாமனைவரும் இராமாயணக் காவியத்தை பாராயணம் செய்வோம்1 இராமனின் பாதையில் பயணிப்போம்11 சீதா இராமனின் பரிபூரணமான அருளுக்கு பாத்திரர்களாவோம்11!.

பச்சை தோரணம்

# வேதாந்த தேசிகன் அருளிய ரகுவீர கத்யம்


திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி
திருப்பதி, 9440120758



*"ஸ்ரீ இராகவம் தசரதாத்மஜப்ரமேயம்*
*சீதாபதிம் இரகு குலான்வய ரத்ன தீபம் |*
*ஆஜாநுபாகும் அரவிந்த தளாயதாக்ஷம்*
*ராமம் நிஷாசர விநாசகரம் நமாமி ||"*

ரகு வம்சத்தை விளங்க வைக்க வந்த ஜோதி ஸ்வரூபனும், அயோத்யா சக்கரவர்த்தி தசரதரின் அருமைப்புதல்வனும், ஜனக புத்ரியான சீதாப் பிராட்டியின் பிராண நாயகனும், அரக்கர் கூட்டத்தை அழித்த மகாவீரனுமான ஸ்ரீராமனை வணங்குவோம். அந்த சக்கரவர்த்தித் திருமகனின் கம்பீரத்தை, திருக்கல்யாண குணங்களை, வீரபராக்ரமத்தை விளக்க வந்த கத்யமே "ஸ்ரீரகுவீர கத்யம்" என்கிற ஸ்ரீமஹாவீர வைபவம். ஸ்ரீமத்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்தது.

தேசிகன் அருளிய ஸ்தோத்திரங்களுள் வசன (கத்ய) ரூபத்தில் உள்ள ஸ்துதி இது ஒன்றே. தனக்கே உரிய கம்பீர நடையில் அவர் உபயோகித்துள்ள பதப்ர யோகங்கள் கேட்பவர்களின் செவிக்கு இனிமையையும், படிப்பவர்களின் நாவுக்கு விருந்தாகவும் உள்ளன. இதில் ஸ்ரீமத் இராமாயணத்தின் ஏழு காண்டங்களிலுள்ள முக்கியமான நிகழ்வுகள் அனைத்தும் இடம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. வால்மீகி இராமாயணத்தையும், கம்ப இராமாயணத்தையும் சேர்த்து உருவாக்கியிருப்பது இன்னும் அற்புதமானது.



எந்த திருவஹீந்திரபுரத்தில் கருட மந்திரத்தை உபாசித்து ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரின் அனுக்ரகத்தைப் பெற்றாரோ, அதே திருத்தலத்தில் இந்த கிரந்தத்தை ஸ்வாமி தேசிகன் அருளியிருப்பது அதை விட விசேஷம். தெய்வ நாயகப் பெருமான் மூல மூர்த்தியாய் கொலுவிருக்கும் அதே திருக்கோயிலில் இன்னொரு சன்னிதியில் அருள் புரியும் ஸ்ரீசீதா, லக்ஷ்மண, ஹனுமன் உடனுறை ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திவ்ய மங்கள ஸ்வரூபத்தைத் தினமும் தரிசித்து, தரிசித்து புளகாங்கிதமடைந்து, அவரது திருக்கல்யாண குணங்களோடு பிரகாசிக்கும் அந்த வீர பராக்ரமத்தைப் போற்றி இந்த "கத்யத்தை" உருவாக்கினாராம்.

"வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகா" என்கிற நூலில் இருந்து இந்த விவரம் தெரிய வருகிறது. இன்றும் திருவஹீந்தரபுர யாத்திரை வரும் பக்தர்களுக்கு, அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திவ்ய மங்கள ஸ்வரூபத்தைத் தரிசிக்கும் போது ஸ்வாமி தேசிகனின் இந்த "ரகுவீர கத்யம்" நினைவுக்கு வராமல் போகாது.



இந்த ரகுவீர கத்யம் தேசிகன் அருளியது பற்றி இன்னொரு தகவலும் உள்ளது. ஒரு சமயம் "கஞ்சு டக்கா" என்கிற விருதைப் பெற்ற "டிண்டிம பட்டர்" என்கிற பண்டிதர் ஸ்வாமி தேசிகனை வாதத்துக்கு அழைத்தாராம். தன்னிடமுள்ள "டமாரம்" (மத்தளம் போன்ற ஒரு கருவி) அதை தேசிகனிடம் கொடுத்து, அதை நீ தட்டுகின்ற ஒவ்வொரு தாளத்திற்கும் நான் ஒரு பத்யம் (சுலோகம்) சொல்கிறேன். அப்படி என்னால் முடியாமல் போனால் அதே போன்று நான் தட்டும் தாளத்திற்கேற்ப நீ சொல்ல வேண்டும் என்கிற வாதத்தை வைக்க, அதற்கு தேசிகன் சம்மதித்தார். இவருடைய தாளத்தின் வேகத்துக்கு இணையாக சொல்ல முடியாமல் அவர் தோற்று விட, அந்த பண்டிதரின் தாளத்துக்கு சரியாக இந்த ரகுவீர கத்யத்தை ஸ்வாமி அருளி வெற்றி கொண்டார் என்றும் சொல்லப்படுகிறது.


இனி தேசிகன் அருளிய இந்த ரகுவீர கத்யத்திலிருந்து ஸ்ரீராமபிரானின் வீரபராக்ரமம் பற்றிய சில சுலோகங்களைப் பார்ப்போம். கத்யத்தின் ஆரம்பத்திலேயே *"ஜய ஜய மஹாவீரா மஹாதீர தௌரேயா!"* – "இணையே இல்லாத வீரனும், மகா தைரியமும் நிறைந்த ரகுவம்ச திலகா! உனக்கு ஜயம் உண்டாகட்டும்" என்று மங்களாசாசனம் பண்ணுகிறார் தேசிகன். இது பால காண்டத்தில் எட்டாவது சுலோகம்.


*"கௌமார கேளி கோபாயித கௌசிகாத்வர*
*ரணாத்வர துர்ய பவ்ய திவ்யாஸ்த்ர ப்ருந்த வந்தித*
*ப்ரணத ஜந விமத விமதந துர்லளித தோர்லளித*
*தநுதர விசிக விதாடன விகடித விசராரு*
*சராரு தாடகா தாடகேய"*


விசுவாமித்ர முனிவர் செய்த ஒவ்வொரு வேள்வியிலும் அரக்கர்களின் உபத்ரவம் அதிகமாகி அவரால் யாகத்தை சரியாக முடிக்க இயலவில்லை. உன் தந்தையான தசரதனிடம் வேண்டி, உன்னையும் இளவல் லக்ஷ்மணரையும் அழைத்துச் சென்றார். நீ அரக்கர்களைக் கொன்று தடையை நீக்கிக் காத்தருளினாய். இளம் பருவத்திலேயே உன் வல்லமைக்கு எல்லை உண்டோ? முனிவர் உனக்கு அஸ்திரங்களைக் கொடுத்தார். அவை உனக்குத் தொண்டு செய்ய எதிரே நின்றன. போரில் முன்னால் நின்று உனக்கு வெற்றியைத் தந்தன. உன்னிடம் சரணமடைந்தவர்களின் எதிரிகளைக் கண்டால் உனக்கு சினம் பொங்கும். உன் தோள் வீரம் அவர்களை வேரறுக்கும். நீ ஒரே ஒரு சிறிய அம்பைக் கொண்டு விசுவாமித்ரரின் கட்டளைப்படி தாடகையைக் கொன்று, அவளது புத்திரர்களான மாரீசன், சுபாகு ஆகியோரை வலிமை இழக்கச் செய்தாய். உன் தோள் வலிமை என்னென்பது? 14,15,16வது சுலோகங்கள். (இது அயோத்தியா காண்டம்)

*"மைதில நகர , ஸுலோசநா லோசந சகோர சந்த்ர*
*கண்ட பரசு கோதண்ட ப்ரகாண்ட கண்டந சௌண்ட*
*புஜதண்ட*
*சண்டகர கிரண மண்டல போதித புண்டரீக வந*
*ருசிலுண்டாக லோசந"*

மிதிலா நகரத்துப் பெண்கள் உன் சுந்தராங்கத வடிவு கண்டு மயங்கித் தங்கள் கண் பெற்ற பலனைப் பெற்றனர். ஜனகரின் அரசவையில் விச்வாமித்ர முனிவரின் வேண்டுகோளின்படி, ஐயாயிரம் வீரர்கள் சேர்ந்து கொண்டு வந்த சிவதனுசை, நீ கையில் எடுத்து நாணேற்ற முற்பட்டபோது, உன் தோள் வலிமை தாங்காது, வில் முறிந்து விழுந்தது. அந்த சந்தோஷத்தில் உன் திருக்கண்கள் மலர்ந்து விளங்கின. சூரியனுடைய







கிரணங்களால் மலர்ந்த தாமரை கூட்டங்களின் அழகை விட உனது திருக்கண்கள் மலர்ந்து இருந்ததை பார்க்கையில் அவற்றின் ஒட்டு மொத்த அழகையெல்லாம் உனது திருக்கண்கள் திருடிக் கொண்டனவோ என்று சொல்லத் தோன்றுகிறது என்கிறார் தேசிகன். என்ன கவி நயம்! அடுத்தது 22–வது சுலோகம்.

*"நிஷாத ராஜ ஸௌஹ்ருத ஸூசித ஸௌசீல்ய ஸாகர!"*

வனத்தில் திரியும் வேடர்களின் தலைவன் குகன். சக்கரவர்த்தித் திருமகனான நீ தாழ்ந்த குலத்தில் தோன்றிய குகனோடு நட்பு கொண்டு, அவனையும் உன்னுடைய சகோதரனாகக் கொண்டதில் உன்னுடைய சௌசீல்ய குணம் வெளிப்படுகிறதே.

இது ஆரண்ய காண்டம். 28,29வது சுலோகம்.

*"தண்டகா தபோவந ஜங்கம பாரிஜாத*
*விராத ஹரிண சார்த்தூல"*

தண்டகாரண்யத்தில் கடும் தவம் புரிந்து கொண்டிருந்த முனிவர்கள் தாங்கள் அரக்கர்களால் துன்பமடைவதை சுட்டிக் காட்ட அவர்களை "ரக்ஷிப்பேன்" என்று வாக்களித்தார். முதலில் உன் மனையாளான சீதா தேவியைத் தூக்கிய விராதனைக் கொன்று அவனது சாபம் தீர்த்தாய். 31,32,33,34 வது சுலோகங்கள் :

*"த்ரிசிர: சிரஸ் த்ரிதய திமிர நிராஸ வாஸர கர*
*தூஷண ஜலநிதி சோஷண தோஷித ருஷிகண*
*கோஷித விஜய கோஷண ।*
*கரதர கர தரு கண்டந சண்ட பவந*
*த்விஸப்த ரக்ஷ: ஸஹஸ்ர நள வந விலோலந மஹா*
*கலப ।।"*

பஞ்சவடியில் எழுந்தருளியபோது மூன்று தலைகளை உடையவனான த்ரிசிரஸ், தூஷணன், கரன் எனும் மூன்று அரக்கர்களோடு சேர்ந்து அவர்களுடைய சேனைகளான பதினான்காயிரம் அரக்கர்களையும் தனி ஒருவனாக நின்று கோரைக் காட்டை ஒரு பெரிய யானை அழிப்பது போல அவர்கள் அனைவரையும் அழித்து வெற்றி கொண்டாய். அஸஹாய சூரன் நீ. வேறு துணை வேண்டாத ஒப்பற்ற வீரன். உன் துணிவுக்குத் தலை வணங்குகிறேன். அடுத்து கிஷ்கிந்தா காண்டம்.

*42வது, 45வது, 46வது சுலோகங்கள்.*



**ஆதிசங்கரர் அருளிய**
**பஜகோவிந்தம்**

*ஜடிலோ முண்டீ லுஞ்சிதகேச:*
*காஷாயாம்பர பஹுக்ருத வேஷ: ।*
*பச்யன்னபி ச ந பச்யதி மூடோ*
*ஹ்யுதர நிமித்தம் பஹுக்ருத வேஷ: ।।*

**ஒருவன் தலையில் சடையினை வளர்த்து முடித்து ரிஷியைப்போல் ஒரு வேஷம் போடுகிறான். இன்னொருவன் தலையை மொட்டை அடித்துக் கொள்கிறான். மற்றொருவன் முடியினை வேறு விதமாக பிடுங்கி (கத்தரித்து) கொள்கிறான். இன்னும் ஒருவன், காஷாய நிறம் உள்ள வஸ்திரத்தினை அலங்காரமாக உடுத்திக் கொண்டு, எல்லோரையும் மயங்கச் செய்கிறான். இவ்விதமான மூடர்கள் எல்லோரும் கண்கள் இருந்தும், உலகம் பொய்யானது என்று கண்டு உணர்வதில்லை. இவர்கள் இவ்வாறு பலவகையான வேஷம் போடுவது எல்லாம் கூட இந்த வயிற்றுக்காகத்தான்.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

*''ப்ரபஞ்ஜந தநய பாவுக பாஷித ரஞ்ஜித ஹ்ருதய''*

*''அதிப்ருதுல பஹுˆ விடபி கிரி தரணி விவர*
*யுக பதுதய விவ்ருத சித்ர புங்க்க வைசித்ர்ய*
*விபுல புஜ சைல மூல நிபிட நிபீடித ராவண ரண*
*ரணக ஜனக*
*சதுருததி விஹரண சதுர கபிகுலபதி ஹ்ருதய*
*விசால சிலாதல*
*தாரண தாருண சிலீமுக''*

சுபந்தனின் சொல்லைக் கேட்டு சுக்ரீவனைக் காண விழைந்து பம்பா நதிக்கரையில், சுக்ரீவனின் மந்திரியான அனுமனின் தன்மையான பேச்சுகளால் கவரப்பட்டு சுக்ரீவனோடு நட்பு பூண்டாய். அவனது தமையன் வாலியின் அபாத செயலைக் கேட்டு சுக்ரீவனுக்கு உதவ முன் வந்தாய். வாலியின் ஒப்பற்ற வலிமையை உன்னால் வெல்ல இயலுமோ என்று சுக்ரீவன் ஐய முற்றபோது அவனுக்காக ஒரே காலத்தில் ஏழு மாமரங்களை ஒரே அம்பால் வீழ்த்தினாய். இலங்கை அரசனான இராவணனையே கதி கலங்க வைத்த வாலியின் அகன்ற மார்பை அம்பால் பிளந்து சுக்ரீவனுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றிய உனது வலிமைக்கு எல்லை உண்டோ! சுந்தர காண்டம் : 49–வது 90–வது 91–வது சுலோகங்கள்.

*''ஸக்ருத் ப்ரபந்ந ஜன ஸம்ரக்ஷண தீக்ஷித: வீர:*
*ஸத்ய வ்ரத:''*

ஒருமுறை என்னைச் சரணமடைந்தவனுக்கு அச்சம் என்பதே வேண்டாம். ரக்ஷிப்பதே எனது விரதம் என்பதை உலகுக்குப் பறை சாற்றினாய். உன்னை அடைந்தவனைப் பாதுகாக்கும் வீரன் நீ. உன்னைச் சரணமடைந்த விபீஷணனை முதலில் ஆக்ஷேபித்த சுக்ரீவனைக் கொண்டே அழைத்து வரச் செய்து அபயம் கொடுத்த சத்யவிரதன் நீயல்லலோ. யுத்த காண்டம் : 58–வது 64–வது சுலோகங்கள்.

*''கடுரடத் அடநி டங்க்ருதி சடுல கடோர கார்முக*
*விநிர்க்கத விசங்கட*
*விகிக விதாடந விகடித மகுட விஹ்வல விச்ரவஸ்*
*தநய விச்ரம ஸமய*
*விச்ராணந விக்க்யாத விக்ரம''*
*''சித சரக்ருத லவந தசமுக முக தசக நிபதந புநருதய*
*தர களித ஜநித*
*தர தரள ஹரி ஹய நயந நளிநவந ருசி கசித கதல*
*நிபதிதஸுˆரதரு*
*குஸுˆம விததி ஸுˆரபித ரத பத''*

உனது வில்லின் முனையிலிருந்து எழும் நாணொலி பகைவர்களுக்குப் பெரும் அச்சத்தை விளைவிக்கிறது. நீ எய்த அம்பால் இராவணனின் கிரீடங்கள் தவிடுபொடியாகி அவனை நிலை குலையச் செய்தது. களைத்துப் போன அவனைக் கொல்லாமல் உயிர்ப் பிச்சை அளித்து களைப்பாறி, புதிய வலிமை பெற்று வரும்படி அனுப்பிய உன் வீரத்தை, யுத்த தர்மத்தை உலகமே போற்றியது. இளைப்பாறி வந்தவனின் பத்து தலைகளையும் உனது கூரிய அம்புகளால் அறுத்துத் தள்ளினாய். பிரமனிடம் பெற்ற வரத்தால் அவைகள் திரும்ப, திரும்ப முளைக்க முடிவில் அந்த பிரம்மாஸ்திரத்தாலேயே இராவணன் மாண்டான். தேவாதி

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

## 2020, மே மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1–3 | திருமலையில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் |
| 4–13 | நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 5–8 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம் |
| 5–14 | ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 5–7 | தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 6 | ஸ்ரீநரசிம்ம ஜயந்தி, மதுரகவியாழ்வார் சாத்துமுறை, ஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பா ஜயந்தி |
| 7 | கூர்ம ஜயந்தி |
| 8 | பராசர ஜயந்தி, அன்னமய்யா ஜயந்தி |
| 11-13 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத்ஸவம் |
| 12 | திருப்பதி கங்கையம்மன் சித்திரைத் திருவிழா |
| 14–23 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 17 | அனுமத் ஜயந்தி, பாதாள மண்டபத்தில் அனுமத் ஜயந்தி. |
| 27-ஜுன்5 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |



தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். இராவணனைக் கொன்று, இந்திரன் முதலானவர்களுக்கும், ரிஷி, முனிவர்களுக்கும் நிம்மதியைத் தந்த உன் வீரம் போற்றுதலுக்குரியது. 70–வது 73–வது 75–வது 76–வது சுலோகங்கள் :

*"விபீஷண வசம்வதீக்ருத லங்கைச்வர்ய"*

*"புஷ்பக ரபஸ கதி கோஷ்பதீக்ருத ககநார்ணவ ஸ்வாமிந்! ராகவ ஸிம்ஹ"*

உன்னை சத்தியமாக இலங்கைக்கு அரசனாக்குகிறேன் என்று விபீஷணனுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றி, நீ வென்ற இலங்கைக்கு அவனை அரசனாக்கி ஆளச் செய்த விசால மனம் படைத்தவன் நீ, விபீஷணன் அனுப்பிய புஷ்பக விமானத்தில் ஏறி அகன்ற ஆகாயத்தைக் கடந்து அயோத்தி திரும்பினாய். சிங்காதனத்தில் ஏறி அமர்ந்து சகல லோகங்களுக்கும் நாயகனாய் விளங்கினாய்.

இரகு குலத்தவர்களுள் உயர்ந்தவனே! சரணமடைந்தவர்களைக் காப்பதில் முதன்மை பெற்றது ரகு வம்சம். அந்த வம்சத்தில் வந்தவர்களில் உன்னைப் போன்ற வீரனும், சரணாகத ரக்ஷகனும் வேறு யாரும் இல்லை என்னும்படி சிறந்து விளங்கிய ராகவ சிம்மமே என்று போற்றுகிறார். 93–வது 94–வது சுலோகங்கள்.

*"ஸ்ரீராம பத்ர: நமஸ்தே புநஸ்தே நம:"*

தனது திருமேனி சௌந்தர்யத்தில் அனைவரையும் ஈடுபடச் செய்து, எல்லோருக்கும் மங்களத்தை அளிப்பவன் நீ. ஸர்வேஸ்வரனாய் நிற்கும் உனது திருவடிகளைப் பலமுறை வணங்குகிறேன்.

**பலஸ்துதி :**

*"கவிகதக ஸிம்ஹ கதிதம்*
*கடோர ஸுகுமார கும்ப கம்பீரம் ।*
*பவ பய பேஷஜ மேதத்*
*படத மஹாவீர வைபவம் ஸுதிய: ॥"*

கலிகளாகிய தர்க்கவாதிகளுக்கு சிங்கம் போன்றவர் தேசிகன். அவர் இயற்றிய இந்த வசன நடை நூல் சம்சாரமெனும் நோய்க்கு மருந்தைப் போன்றது.

இந்த நூலைப் படித்து, ஸ்ரீராமனிடம் பக்தி கொண்டு, அவரது திருவடிகளில் பிரபத்தி பண்ணினால் அவர்கள் மோக்ஷம் பெறுவது உறுதி. ஒப்பற்ற வீரனான ஸ்ரீராமபிரானின் பெருமையை விளக்கும் இந்த "ரகுவீர கத்யம்" எனும் மஹாவீர வைபவத்தைப் படித்து இன்புறுவோம்.


## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

# முன்வினை களையும் இராமாநுஜ நூற்றந்தாதி

திரு. எம்.எஸ். லக்ஷ்மி நாராயணன்,
திருவள்ளூர், 94448 31165




ஸ்ரீமத் ராமாநுஜரின் எல்லையற்ற கருணையைப் போற்றி திருவரங்கத்து அமுதனார் "இராமாநுஜ நூற்றந்தாதி" என்று நூற்றி யெட்டு அருமையான பாடல்களை இயற்றினார். இப்பாடல்கள் "ப்ரபந்ந காயத்ரி" என்றும் அழைக்கப்படு கிறது.

ஸ்ரீமத்ராமாநுஜரின் கருணையினால் தான் முற்பிறவியில் செய்த பாவங்களை, தீவினைகளை எல்லாம் களைந்தார் என்று நூற்றந்தாதியில் பல பாடல்களில் அமுதனார் கூறுகிறார். ராமாநுஜரின் புகழையும், கருணையையும் போற்றும் அமுதனார் முன் வினையை, தன் பாவங்களைப் போக்கியதை மிக முக்கியமாகவும் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீமத் ராமாநுஜரின் நூற்றந்தாதியின் முதல் தனியனே முன்வினைப் பற்றியே ஆரம்பிக்கிறது.

*"முன்னை வினை அகல மூங்கில் குடி அமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும் என்னுடைய
சென்னிக்கு அணியாகச் சேர்த்தினேன் தென் புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்?"*


அமுதனாரின் பொன் போல் ஒளி வீசி பிரகாசிக்கும் தாமரை பூக்களைப் போன்ற பாதங்களை என்னுடைய தலையில் வைத்துக் கொண்ட கணமே என் பாவங்கள் எல்லாம் அழிந்தன. எனவே தென் திசையில் உள்ள எமனுடைய பட்டணத்திற்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை. அமுதனாரின் மலர் பாதங்களுக்கே இவ்வளவு பெருமை என்றால் அவருடைய பாடல்களின் பெருமை உலகினும் பெரிது.

அமுதனார், இராமாநுஜர் தன் முன் வினையைக் களைந்ததினால் அவருடைய பெரும் கருணையை *"யாரே அறிபவர் நின் அருளின் தன்மை"* என்று இருபத்து ஐந்தாவது பாடலில் அருளைப் பற்றி போற்றுவதுடன் அதன் "தன்மைக்கு" ஏற்றம் தருகிறார்.

*"காரேய் கருணை இராமாநுச! இக்கடலிடத்தில்
ஆரே அறிபவர் நின் அருளின் தன்மை? அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான் வந்து நீ என்னை உய்த்தபின் உன்
சீரே உயிர்க்கு உயிராய் அடியேற்கு இன்று தித்திக்குமே"*

இராமாநுஜரின் கருணை கார் மேகம் பொழியும் மழை போன்றது. அந்த அருளின் தன்மை, தான் செய்த முன் வினையை போக்கியது என்று தனது இருபத்து நான்காவது பாடலில் கூறுகிறார். அதனாலேயே அடுத்த இருபத்து ஐந்தாவது பாடலில் "காரேய் கருணை இராமாநுச!" என்று நன்றி உணர்ச்சியும் பக்தியும் பொங்கி மேலிட்டு கதறுகிறார். *"காரேய் கருணை இராமாநுச!"* என்ற சொற்கள் உயிரோட்டம் பெற்று ஒலிக்கும் சொற்கள், இராமாநுஜரின் கருணை கொட்டித் தீர்க்கும் கார்மேகங்கள் போன்றது. அப்படிப்பட்ட அவருடைய மாபெரும் கருணை தான் முன்னைப் பழவினையின் வேரை அறுத்தது என்றும், தன்னை புவியில் ஒரு பொருளாக்கியது என்றும், நான்காவது பாடலில் அமுதனார் கூறுகிறார்.

*"என்னைப் புவியில் ஒரு பொருள்*
*ஆக்கி மருள சுரந்த*
*முன்னைப் பழவினை வேர் அறுத்து*
*ஊழி முதல்வனையே*
*பன்னப் பணித்த இராமாநுசன் பரன்*
*பாதமும் என்*
*சென்னித் தரிக்க வைத்தான் எனக்கு*
*ஏதும் சிதைவு இல்லையே.*




இராமாநுஜரின் மலர்த்திருவடிகளை தன் தலையில் தரித்தவுடனேயே தன்னுடைய முன் பழவினை (பாவங்கள்) வேருடன் அழிந்தது. எனவே, தனக்கு எந்த அழிவும், துன்பங்கள் ஏதும் இல்லை என்கிறார். வெட்டிய மரம் வேர் இருந்தால் மீண்டும் துளிர் விட்டு வளரும். ஆனால், வேர் வெட்டிச் சாய்த்த மரம் மீண்டும் துளிர் விடாது. மண்ணும் மரமும் வெவ்வேறு ஆகிவிட்டது, அப்படிதான் தன்னுடைய பாவங்கள் வேருடன் அற்றுப் போயின என்கிறார்.

பாவத்தால் ஏற்படும் துன்பம் அல்லள் எல்லாமே அழியும். இருபத்து நான்காவது பாடலில் முன்வினை தீவினை எவ்வளவு கொடுமை நிறைந்தது என்பதை "வெம் தீவினையால்" என்று குறிப்பிடுகிறார்.

*"மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல் தொறும் மூத்து அதனால்*
*எய்த்தொழுந்தேன் முன நாள்களெல்லாம் இன்று கண்டுயர்ந்தேன்*
*பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்தவிய*
*கைத்த மெய்ஞ் ஞானத்து ராமநுசனென்னும் கார் தன்னையே"*

முற்பிறவியின் தீவினைப் பயன்களை "வெந்தீவினை" என்று கூறி அத்தீவினையின் கொடுமையை எடுத்துக் காட்டுகிறார். தீவினையின் பயனால் முற்பிறவியிலும் இப்பிறவியிலும் ஏற்பட்ட, ஏற்படுகின்ற துன்பம், பிறப்பு முதல் முதுமை வரை வாட்டுகிறது. இராமாநுஜரின் கருணையைக் கண்டு உணர்ந்து அதனால் தான் உயர்ந்து விட்டதாக–துன்பமற்ற பிறவியை அடைந்து உயர்ந்து விட்டதாகக் கூறுகிறார். அதனால் பாவத்தைப் போக்க வேண்டிய பல பிறவிகளும் ஒழிந்தன.

தேனீக்கள் தேன் கூட்டை இடையின்றி மொய்ப்பது போன்றது தீவினைகள் என்கிறார். அப்படிப்பட்ட துன்பங்கள் ஏற்படாமல் இராமாநுஜரின் கருணையை பெற்று உயர்ந்து விட்டதாகக் கூறுகிறார். முப்பத்தி நான்காவது பாடலில் எப்படி தன் முன்வினை பயன் ஒழிந்தது என்றும் கூறுகிறார்.

*"நிலத்தைச் செறுத்து உண்ணும்*
*நீசக்கலியை நினைப்பரிய*
*பலத்தைச் செறுத்தும் பிறங்கிய*
*தில்லை என் பெய் வினை தென்*

## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத்திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகிய வற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.
- திருமலை நடைபாதையில் நடந்துச் செல்லும்போது பக்தர்கள் குழுவாகச் செல்லவும்.

*புலத்தில் பொறித்த அப்புத்தகச்*
*சும்மை பொறுக்கிய பின்*
*நலத்தைப் பொறுத்தது இராமாநுஜன்*
*தன் நயப் புகழே''*

முற்பிறவியிலே, அதற்கும் முற்பட்ட எத்தனையோ பிறவிகளில் செய்த பாவங்களை சித்ரகுப்தன் எத்தனையோ புத்தகங்களாக (நோட்டுகளாக–வால்யூம்களாக) அவை தூக்கவும் முடியாத பாரம் நிறைந்த, சுமை மிகுந்த பக்கங்களாக, பொறித்து வைத்திருக்கிறார்.

எழுத்துக்கள் இல்லை. அவை, கல்லில் பொறிக்கப்பட்டது போன்ற எழுத்துக்கள். அவை கல்லில் பொறித்தது. ஆண்டுகள் பலவானாலும் அழியாது. அதனாலே தென்புலப் புத்தகத்தில் "பொறித்த சும்மை" என்கிறார். அப்படி அழியாத எழுத்தக்களால் பொறித்து வைக்கப்பட்டிருந்த பாவங்களை போக்கினார் இராமாநுஜர் என்கிறார். ஒப்புவமையற்ற நினைத்தும் பார்க்க முடியாத அற்புத செயல் இது!

இராமாநுஜரின் கருணைப் போற்றலை என்னவென்று சொல்வது? கருணையின் எல்லை கடந்து, வானளாகி நிற்கும் ஒளி வீசும் அற்புத செயல் செயற்கரிய செயல்.

*''அற்புதன் செம்மைராமாநுஜன் என்னையாள வந்த கற்பகம்''* என்று ஐம்பத்து மூன்றாவது பாடலில் அமுதனார் கூறுவது எவ்வளவு உண்மை!

முன்வினைப் பற்றி இன்னும் சில பாடல்கள் அமுதனார் குறிப்பிட்டு, அதை போக்கியவர் இராமாநுஜர் என்று கூறுகிறார்.

முன்வினை அகல இராமாநுஜர் நூற்றந்தாதியை தினமும் ஓதுவோம். அமுதனார் பொன்னங்கழல் பற்றுவோம். பொங்கிய கீர்த்தி இராமாநுஜன் அடிப்பூ மன்னுவோம்.

*''பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த*
*பாமன்னு மாறனடி பணிந்துய்ந்தவன் பல்கலையோர்*
*தாம் மன்ன வந்த இராமாநுசன் சரணாரவிந்தம்*
*நாம் மன்னி வாழ நெஞ்சே! சொல்லுவோம் அவன்*
*நாமங்களே''*

## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- யாத்திரிகர்கள் தங்களுடைய விலையுயர்ந்த உடைமைகள், பொருட்கள், தங்க நகைகள் பத்திரமாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- தங்களுடைய உடைமைகளை பாதுகாப்பதற்காக சிறு குழந்தைகள் மற்றும் முதியோரை விட்டு செல்லுதல் கூடாது.
- அடையாளம் தெரியாத ஆட்கள் கொடுக்கும் தண்ணீர், டீ, காபி மற்றும் தின்பண்டங்களை உட்கொள்ள வேண்டாம்.
- திருடர்கள் பணம், நகை போன்ற பொருட்களை கீழே போட்டு, உங்கள் பொருட்களை அபகரிக்க எண்ணுவர். ஆசைப்பட்டு ஏமாறாதீர்கள்.
- அறையில் இருந்தால் மட்டும் செல்போன் சார்ஜிங் வைக்க வேண்டும். சார்ஜிங் வைத்து விட்டு வெகுதூரம் செல்லுதல் கூடாது.
- அடையாளம் தெரியாத ஆட்கள், நாங்களும் உங்கள் ஊரின் அருகில் வசிப்பதாகவும், உங்களுக்கு உதவி செய்கிறோம் என்றும் அறைகள், தரிசனம் முதலான வசதிகளைச் செய்து தருகிறோம் என்றால் அதை நம்பி ஏமாறாதீர்கள்.
- இலவசபேருந்தில் ஏறும் போதும், இறங்கும் போதும் உங்களுடைய மணிபர்ஸ், கைப்பைகளை பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
- குளியலறைக்கு விலையுயர்ந்த பொருட்களை கொண்டு செல்லுதல் கூடாது. உடைமைகளை உங்களுடன் வந்த உறவினர்களிடமோ அல்லது தி.தி.தே. லாக்கரில் வைத்தல் வேண்டும்.
- லட்டு டோக்கன் அளிக்குமிடம், லட்டு வாங்குமிடம் மற்றும் க்யூ வரிசைகளில் மணிபர்ஸ், பைகளை பத்திரமாக வைத்துக் கொள்ளவும்.
- ஆர்.டி.சி. பேருந்து நிலையத்தில் பேருந்தில் ஏறும் போதும், இறங்கும் போதும் தங்கள் விலையுர்ந்த ஆபரணங்களை பத்திரமாக பார்த்துக் கொள்ளவும்.

அத்துவைதத்தில்

# அற்புதங்கள் புரிந்த ஞானகுரு ஆதிசங்கரர்



திரு. ஆர். வெங்கடரமணன், தர்மபுரி, 9894527669

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அப்படி பிறந்தாலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கி பிறத்தல் அரிது" என்று சொன்னார் எல்லாம் வல்ல முருகன் அருள் பெற்ற ஔவை மூதாட்டி. ஆம் கிடைத் தற்கரிய தூய்மையான மனிதப் பிறவியை புண்ணிய வசத்தால் பெற்றுள்ளோம். ஆறறிவு பெற்ற மனிதப் பிறவி நல்லொழுக்கம், நல்வாழ்வு வாழ இதனை நன்முறையில் அமைத்துக் கொள்வதே சிறந்ததாகும். இதற்கு குரு உபதேசம் தேவை.

### சர்வேஸ்வரனை அறிய குரு உபதேசம் அவசியம் :

அம்மெய்ப்பொருளைக் காண இப்பிறவியில் நமக்கு குருவின் ஆசி அவசியம் தேவைப்படுகின்றது. இந்து மத காவலரான ஸ்ரீஸ்ரீ ஆதிசங்கர ஞான குருவை வழிபட்டால் நமக்கு நற்பலன்களை அள்ளித் தருவார். அந்த அற்புத குருவே நமக்கு பிரும்மா, விஷ்ணு, மகேஸ்வரராகக் காட்சி அளிப்பார். நம் இதயக் கமலத்தில் வீற்றிருக்கும் சர்வேஸ்வரரை தியானிப்பதால் உள்ளமும், உடலும் தூய்மை அடைகின்றது என்பதே அவரின் உபதேசமாகும்.

### அற்புத ஞானகுரு ஆதிசங்கரர் அவதரித்த நன்னாள் :

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன், கேரள புண்ணிய பூமியில் காலடி என்னும் திருத்தலத்தில் சிவகுரு, ஆர்யாம்பாள் தம்பதிகளுக்கு ஓர் அற்புத ஞானக் குழந்தை சங்கரராக அவதரித்து, இந்து மதத்தினை ஓர் ஒப்பற்ற ஒளி வீசும் மதமாக மாற்றி, பாரத தேசம் முழுமையும் ஒளி வீசச் செய்த பெருமை இவருக்கு உண்டு. குறுகிய காலத்திலேயே சாஸ்திரங்கள், யோகம், வித்தை, வேத உபநிடதங்களில் மிகச் சிறந்து விளங்கலானார்.



தன் அபார சக்தியினால் பல அற்புதங்கள் புரிந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். கூடு விட்டு கூடு பாயும் உபாயம் போன்றவற்றையும் தன் தபயோக பலத்தால் கற்றறிந்தார். ஒரே சமயத்தில் பல இடங்களில் காட்சியளித்து வியப்பில் ஆழ்த்தினார்.

### தாயன்பு :

வயதான தன் தாய் நீராட வெகுதூரம் செல்ல வேண்டி சிரமப்பட்டதை கண்டு மனம் உருகி, தன் தபோ பலத்தால் பூர்ணா நதியை தன் வீட்டருகே வரவழைத்து அற்புதம் செய்து, பெற்ற தாயின் பாசத்திற்கு மகனின் கடமையை செய்து பேரானந்தம் கொண்டார். தன் தாய் இறுதி நிலையில் தவித்த போது உடனே ஆகாய மார்க்கமாய் பிரவேசித்து வந்து தன் கடமையை செய்து மன நிறைவு பெற்றார்.

### குருவைத் தேடிய ஞானகுரு :

கோவிந்த பகவத் பாதாளை தன் குருவாக ஏற்று, குருகுலவாசம் எய்தி, சேவையாற்றி, சிறப்புடன் திகழ்ந்தார். தன் குருவிடம் யோக, தபோ,

இரகசியங்களை நன்கு கற்றுத் தேர்ந்து பிரகாசிக்க லானார். பிரும்ம சூத்திரம், வேத சாஸ்திரம், யோக அஷ்டாங்க கலை நுட்பங்களை கற்றதுடன், யோகி ஸ்ரீயாக்ஞ வல்கிய மகரிஷியின் தர்ம சாஸ்திரம், பிருக தாரண்யம் போன்ற அதிநுட்ப விளக்கங்களையும் கற்று மேதாவி யாகத் திகழ்ந்தார். பின் தன் குருவின் கட்டளைப்படி காசி க்ஷேத்திரம் வந்தடைந்து, விஸ்வநாதரை தரிசித்து மன நிறைவு பெற்றார்.

கங்கைக்கரையில் அமர்ந்து யாகங்கள் செய்து, சர்வேஸ்வரரை தினமும் தியானித்து பஜ கோவிந்தம், சௌந்தர்யலஹரி, சிவானந்தலஹரி போன்றவற்றை இயற்றி, பலரும் பயனுர வழங்கி மனநிறைவு பெற்றார்.

### பாரத தேசம் முழுமையும் திக் விஜயம் செய்த அற்புத ஞானி:

துரித வாகனங்கள் இல்லாத காலத்திலேயே தன் தபோயோக வலிமையினால் பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்து இந்து மதத்தின் சிறப்புகளை அனைத்து மக்களும் அறிந்து கொள்ளச் செய்தார்.

### ஷண்மத ஸ்தாபனாச்சாரியார் :

இந்து மதத்தின் வழிபாட்டு முறைகளை முறைப் படுத்தினார். இது ஆதிசங்கர பகவத் குருவின் அற்புத மான செயல்பாடு. இதனால் இவரை "ஷண்மத ஸ்தாப னாச்சாரி" என புகழ்ந்தனர் ஆன்றோர். அனைத்து மக்க ளும் ஒற்றுமை உணர்வுடனும், ஒருமைப்பாட்டுடனும் வாழ அன்றே வழிவகுத்துக் கொடுத்த பிரும்ம ஞானி யாகத் திகழ்ந்தார்.

பாரத தேசத்தில், நான்கு திசைகளில், நான்கு பீடங்களை நிருவி, சனாதன தருமத்தை நிலைநாட்டினார். கிழக்கில் பூரி ஜெகன்னாத், மேற்கில் துவாரகா பீடம், வடக்கில் பத்ரிகாஸ்ரமம் (ஜோதிர்மடம்), தெற்கில் சிருங்கேரியில் தஷிணாம்னாய ஸ்ரீசாரதா பீடம் அமைத்து சனாதன தர்மத்தை நிலை நிறுத்தினார். இமயம் முதல் குமரி வரை இந்து தர்மத்தை வேரூன்றச் செய்தார். காஷ்மீரத்தில் சர்வக்ஞ பீடாதிபதியாக அந்தர்யாமியாகத் திகழ்ந்தார்.

காஞ்சியில் ஸ்ரீசக்ர யந்தரம் ஸ்தாபனம் செய்தும், திருமலை திருவேங்கடமுடையான் சன்னதியில் ஸ்வர் ணாகர்ஷண பைரவயந்ரம் ஸ்தாபித்தும், கொல்லூர் மூகாம்பிகையில் ஸ்ரீசக்ர பீடம் அமைத்தும் பிரகாசிக்க லானார்.

### இந்து மத ஆணிவேராக ஆதி சங்கர ஞானகுரு :

ஆதிசங்கர அற்புத மகான் அவதரித்த அற்புத நன்னாளான ஜெயந்தி அன்று நாம் அனைவரும் ஒன்று திரண்டு, குரு சரணார மகிமையை மனதார துதித்து, குரு வந்தனம் செய்வோமாக. ஞான குருவை தியானித்து குரு ஜெயந்தியில் பங்கு கொண்டு ஆத்ம ஞானம் பெறுவோம். சர்வேஸ்வரரின் மறு அவதாரமான ஆதிசங்கர ஞானகுருவின் பாதார விந்தங்களைப் பணிந்து பரமபவித்ரம் பெறுவோம்.

"ஈசாவாஸ்யம் இதம் சர்வம்" என்ற உபநிடத்தின் பேருண்மையை அறிந்து நன்மைகள் பெருவோம். பஜகோவிந்தம் ஜபிப்போம். மழை வேண்டி அனைவரும் பிரார்த்திப்போம். ஈஸ்வர சங்கல்பத்தால் மழை பொழி யும். மண் குளிரும், மக்கள் அனைவரும் மகிழ்வர். மரம், செடி, கொடிகள் தளிர்க்கும், எங்கும் பசுமை காட்சி அளிக் கும், பரமேஸ்வரரின் அருள் அனைவருக்கும் கிடைக் கும். ஆதிசங்கரரின் தாள் பணிந்து அருள் பெறுவோம். குருவருளும், திருவருளும் ஒருங்கேப் பெற்று மகிழ் வோம்.



# திவ்விய திருத்தலம் திருமலை



**நாக சதுர்த்தி - பெரிய சேஷ வாகனம் :**

ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் சதுர்த்தி நாளன்று அதாவது நாக சதுர்த்தி அன்று மாலை திருமலையப்ப ஸ்வாமிக்கு பெரிய சேஷ வாகன உத்ஸவம் நடைபெறும்.

**பார்வேட்டை உத்ஸவம் :**

ஆண்டுதோறும் மாட்டுப் பொங்கல் நாளன்று ஸ்வாமிக்கு பார்வேட்டை உத்ஸவம் நடைபெறும். திருமலையப்ப ஸ்வாமி சங்கு, சக்கரம், கதை, கட்கம், தனுசு ஆகிய பஞ்ச ஆயுதங்களை தரித்து வேட்டைக்குப் புறப் பட்டு, பார்வேட்டை மண்டபத்தை அடைகிறார். ஸ்வாமியின் பின்னாள் மற்றொரு பல்லக்கில் ஸ்ரீகிருஷ்ணரும் செல்வார்.

அங்கே திருமலையப்ப ஸ்வாமி, தாள்ள பாக்க வம்சத்தினர் மற்றும் சன்னிதி கொல்லர் களின் சேவைகளைப் பெறுகின்றார். மாலை வரை பார்வேட்டை உத்ஸவத்தில் பங்கேற்ற பின் திருமலையப்ப ஸ்வாமி மற்றும் ஸ்ரீகிருஷ் ணர் திருவீதி வலமாக எழுந்தருளி ஆல யத்தை அடைகின்றனர். அதிக மாதம் வரு கின்ற ஆண்டில் ஸ்வாமிக்கு இரண்டு முறை பிரம்மோத்ஸவங்கள் நடைபெறும். முதலில் நடைபெறும் உத்ஸவத்தை “வருடாந்திர பிரம்மோத்ஸவம்” என்றும், இரண்டாவதாக நடைபெறும் பிரம்மோத்ஸவத்தை “நவராத் திரி பிரம்மோத்ஸவம்” என்றும் கூறுவர். இவ்வாறு இரண்டு பிரம்மோத்ஸவங்கள் நடைபெறும் ஆண்டில் இரண்டாவது பிரம்மோத்ஸவம் நிறைவடைந்த அடுத்த நாள் திருமலைவாசனின் “பார்வேட்டை உத்ஸவம்” நடைபெறும்.

**இரத சப்தமி :**

ஆண்டுதோறும் தை மாதம் வளர்பிறையின் சப்தமி நாளன்று “சூரிய ஜெயந்தி” அதாவது “இரத சப்தமி” என்ற பெயரு டன் சூரிய பகவானின் ஜெயந்தியை நிகழ்த்துகின்றனர். இந்த உத்ஸவம் கண்ணுக்கு விருந்தாய் திருமலையில் நடைபெறும்.

இந்நாளில் திருமலையப்ப ஸ்வாமியை சூரியோதயம் முதற்கொண்டு இரவு சந்த்ரோதயம் வரை 7 வாகனங்களில் உலா வரச் செய்வர். சூரியப்பிரபை, சிறிய சேஷ வாகனம், கருட வாகனம், அனுமத் வாகனம், கல்பவிருக்ஷ வாகனம், சர்வ பூபால வாகனம் மற்றும் சந்திரப்பிரபை வாகனம் முதலிய 7 வாகனங் களில், திருமலையப்ப ஸ்வாமி பக்தர்களுக்கு தரிசனமளிக்கிறார். மதியம் ஸ்வாமி புஷ்கரணியில் சக்ர ஸ்நானம் நடைபெறும். இந்த இரத சப்தமி நாளை “ஒரு நாள் பிரம்மோத்ஸவம்” என்றும் அழைப்பர்.

**தெப்போத்சவம் :**

ஆண்டுதோறும் பங்குனி மாத பௌர்ணமியன்று நிறைவு பெறும் வகையில் 5 நாட்கள் தெப்போத்ஸவம் ஸ்வாமி புஷ்கரணியில் நடைபெறும். 15 ஆம் நூற்றாண்டில் நின்றுபோன

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா, 9885701696



இந்த தெப்போத்ஸவம் *1921* முதல் தேவஸ்தானத்தரால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இந்த தெப்போத்ஸவத்தின் முதல் நாள் ஸ்ரீசீதா ராம லட்சமணரும், இரண்டாம் நாள் ருக்மணி உடனுறை கிருஷ்ணரும், மூன்றாம் நாள் முதல் ஐந்தாம் நாள் வரை ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமியும் தெப்பத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு தரிசனமளிப்பர்.

மேலே கூறப்பட்டவை மட்டுமின்றி மார்கழி மாதத்தில் – திருப்பாவை, வைகுண்ட ஏகாதசி, பிரணய கலஹோத்ஸவம், அத்யயனோத்ஸவம், நரசிம்ம ஜெயந்தி, ஸ்ரீவராஹ ஜெயந்தி, அனந்த பத்மநாப சதுர்த்தி, சக்ர தீர்த்த முக்கோட்டி, கைசிகத்வாதசி, கார்த்திகை தீபோத்ஸவம், க்ஷேத்திர பாலக உத்ஸவம், திருமலையப்ப ஸ்வாமி பாக் சவாரி உத்ஸவம், புரிசை தோட்டோத்சவம், தண்ணீரமுதோத்ஸவம் ஆகிய வருடாந்திர உத்ஸவங்களும் நடைபெறுகின்றன.

ஆனந்த நிலையன் – உத்ஸவப் பிரியன்! பக்தப்ரியன்! அந்த ஸ்வாமிக்கு பக்தர்களின் மேல் உள்ள அன்பை கூற இயலாதது. தன்னை அடைந்த பக்தர்களால் உத்ஸவங்களை நிகழ்த்திக் கொள்வார். வேண்டுதல்களை எளிதில் ஏற்றுக் கொள்வார். ஒரு வேளை நாம் உத்ஸவங்களை செய்யாமலிருந்தாலும் அந்த உத்ஸவங்களைக் கண்டாலே போதும்! நம் பாவங்கள் தீரும்! கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் அமைதி கிட்டும்! எல்லையில்லா ஆனந்தம் பெருகும்.

கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானுக்கு திருமலை நம்பி, அனந்தாழ்வான், தாள்ளபாக்க அன்னமாசார்யர், மகந்த் ஹதிராம் பாவாஜி, மாத்ரு ஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா போன்றோரும் திருமலையில் வீற்றிருந்து, திருவேங்கடமுடையானுக்கு கைங்கர்யத்தை புரிந்து, எம்பெருமானிடம் சரணாகதி அடைந்தனர்.

**முற்றும்.**



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 44

**இடமிருந்து வலம்**

1. இராமருக்கு பரசுராமர் கொடுத்த கோதண்டம்....(6)
2. வேடர்களின் தலைவன்..... (3)
4. வாலியின் தம்பி......(5)
6. இராம ஜென்ம பூமி.....(4)
10. இராமருடைய இரத சாரதி....(3)
13. இராவண தேசம்......(4)
14. பரதனின் தாய்.....(3)
15. இராமரின் ஒரு பெயர்.....(4)
19. இராவணனின் ஒரு மகன்.....(3)
22. கூனியின் பெயர்.....(4)
23. சீதையின் தந்தை......(4)
27. லக்ஷ்மணனின் தம்பி.....(6)

**வலமிருந்து இடம்**

4. லக்ஷ்மணனின் தாய்......(4)
5. பாதுகையால் நாடாண்டவன்.....(4)
8. கதாநாயகன்.....(3)
9. வானரங்களின் வலிமையான ராஜா.....(2)
10. மாய மானாக வந்தவன்.....(5)
12. சீதையின் ஒரு பெயர்.....(3)
13. இராவணனின் மாயாஜால மகன்.......(6)
16. இலங்கைக்கு அரசனான நீதிமான்.....(5)
17. விஷ்ணுவின் வாகனன்.....(4)
19. இராமருக்கு தெய்வீக ஆயுதங்களை அளித்த முனிவர்....(6)
22. இராவணனின் பத்தினி.....(5)
23. கழுகு.....(3)
24. வானர தேசம்.....(5)
26. ஆஞ்சநேயருக்கு சீதை அளித்த வரம்....(5)
28. இணைபிரியாத் தம்பி.....(5)

**மேலிருந்து கீழ்**

1. சாப விமோசனம் பெற்ற கந்தர்வன்.....(4)
3. ராமருக்கு கனிவகைகள் வழங்கிய மூதாட்டி.....(3)
4. அயோத்தி அமைச்சர்.....(6)
7. கல்லாய் கிடந்த பத்தினி.....(4)
18. சீதையின் (அரக்கத்) தோழி.....(4)
20. வாலியின் மனைவி....(2)
21. சீதையின் மறுபெயர்.....(3)

**கீழிருந்து மேல்**


9. இராமாயணத்தைப் படைத்தவர்.....(4)
10. ஆஞ்சநேயர், அனுமான்.....(3)
11. இராமரின் அன்புத்தந்தை.....(5)
15. அசுரபல அரசன்.....(4)
25. கதாநாயகி.....(2)
27. அயோத்தியில் ஓடும் நதி.....(3)
29. இராஜகுரு மகரிஷி....(5)
30. ஜனகரின் புதல்வி....(3)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | | | 3 | |
| | | | 4 | | | | | | | 5 | |
| | | | | 6 | | | | | 7 | | |
| | | 8 | | | | | | | | | 9 |
| | | | | | | | 10 | 11 | | | 12 |
| | | | | | | 13 | | | 14 | | |
| 15 | | | | | | | 16 | | | | 17 |
| | | 18 | | | 19 | | | | 20 | | 21 |
| | | | | | | 22 | | | | | |
| | | 23 | | | | | | | | | 24 |
| | | | | | | | 25 | | | 26 | |
| 27 | | | | | | | | | 28 | 29 | 30 |

தொகுப்பு : திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807

விடைக்கு 49 ஆம் பக்கம் பார்க்கவும்.

# அன்னமய்யா வாழ்க்கை வரலாறு



*“அரலேக யீ யன்ன மாசார்ய சரித
வெரவக நீகு நே வின்னவிஞ்செதனு
மன்னிஞ்சி யலமேலு மங்கதோ நீவு
நினும்பாயனி பக்த நிகரம்புதோட
நவதாரு ஸ்ரீவேங்கடாசலாதீச!
அவதரிம்புண்டு குருஹரி பக்துலார!”*

– அன்னமாச்சார்யா
சரித்ரம் – த்விபதம்

பக்கம் *57–59*

இந்த அன்னமய்யா வரலாற்றினை எந்தவித அச்சமும் இன்றி உனக்கு சமர்ப்பிக் கிறேன். அலர்மேல் மங்கையுடன் கூடி இருக்கும் ஸ்ரீவேங்கடேசா! குறைகள் ஏதும் இருப்பின் மன்னித்து ஏற்று, உன்னைக் கணமும் பிரிந்திருக்க இயலாத பக்தர்கள் கூட்டத்திலேயே நான் பிறவிதோறும் இருக்குமாறு அருள்வாய்! மேன்மை பொருந்திய ஹரி பக்தர்களே இதனைக் கேட்டு மகிழுங்கள்!


பூலோக வைகுண்டமாகக் கருதப்படும் திருமலை ஒரு புனிதத் தலம். இம்மலையில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் ஊடுருவி விரிந்துப் பரந்துள்ள திருவேங்கடாசலனைத் தன் பதகவிதைகளால் அலங்கரித்த அன்னமய்யா, பிறவிப் பெரும் பயனை அடைந்த ஒரு மகான். தன்னை ஆன்மீக நெறியில் உயர்த்திக் கொண்டதோடல்லாமல் தெலுங்கு தேசத்தவர்களையும் உய்யுமாறு செய்துள்ளார். பிறர் தம்மைப் புகழ்ந்து பேச வேண்டுமென்றோ, இலக்கியத்தில் சிறந்த பண்டிதர்கள் புகழ வேண்டுமென்பதற்காகவோ, விருதுகள், சன்மானங்கள் பெற வேண்டுமென்பதற்காகவோ அவர் பாடல்களை இயற்றவில்லை.

ஸ்ரீஹரியுடன் ஐக்கியமாக வேண்டும் என்ற ஒரே இலக்கோடு தான் அவரது இலக்கியப் படைப்பு நிகழ்ந்தது. அதனால்தான் ஹரியுடன் எப்போதும் வாசம் செய்யக் கூடிய சிரஞ்சீவியானார்.

*32* ஆயிரம் கீர்த்தனைகளால் ஹரியின் லீலைகளைப் பாடி தெலுங்கு இலக்கிய படைப்புகளில் “பதகவிதா பிதாமகர்” என்று புகழப் பெற்றார். திருவேங்கடவனின் முன்பாக நின்று அப்போதைக்கப்போதே ஆசுக்கவியாகப்பாடி பல்விதமாகத் துதித்தார். இராமாயண, பாரத, பாகவதப் புராணங்களில் கூறப்பட்டுள்ள தசவதார நிகழ்ச்சிகளை, எம்பெருமானின் லீலைகளைத் தன் பதகவிதைகளில் பாடி மகிழ்ந்தார். ஆந்திர மாநிலம் முழுவதும் பயணம் செய்து, திருவேங்கடவனின் பக்தியைப் பரப்பி வந்தார்.

பல திருத்தலங்களை தரிசித்து தீர்த்தங்களில் நீராடினார். திருப்பதி கோவிந்தராஜ ஸ்வாமி, கடப்பா வேங்கடேசுவரர், ஒண்டிமிட்டா ராமர், ப்ரொதுட்டூரு சென்னகேசவ ஸ்வாமி, அகோ பிலம் நரசிம்ம ஸ்வாமி, மார்க்காபுரம் சென்னகேசவ ஸ்வாமி, ஸ்ரீரங்கம் ரங்கநாத ஸ்வாமி, வாயல்பாடு பட்டாபி ராம ஸ்வாமி, கொயில குண்டா, பாண்டுரங்க ஸ்வாமி, கசாபுரம் ஆஞ்சநேய ஸ்வாமி... என பல திருத்தலங்களில் குடி கொண்டுள்ள அர்ச்சாவதார மூர்த்திகளை இடைவிடாது தரிசித்து அந்த அர்ச்சாவதார மூர்த்திகளையும் தான் தரிசிக்கும் திருவேங்கடவனாகவே பாவித்துப் பாடினார்.





நித்ய கல்யாணோத்ஸவம், திருப்பள்ளியெழுச்சி, சோபனம், வஸந் தோத்ஸவம் என திருமாலுக்கு நடைபெறும் பலவித சேவைகளையும் வர்ணித்துப் பல பாடல்களை இயற்றி மகிழ்ந்தார்.

கடப்பா மாவட்டம், ராஜம்பேட்டை தாலுக்காவில் குக்கிராமமான தாள்ளபாக்கத்தில் லக்கமாம்பா, நாராயணசூரி தம்பதியருக்கு அன்ன மய்யா, தொடர் ஆண்டு 1408 ஆம் வருடம், வைகாசி மாதம், பௌர்ணமி யன்று ஸ்ரீஹரியின் ஆயுதமான நந்தகத்தின் (வாள்) அம்சமாகப் பிறந்தார். அவரது ஐந்தாவது வயதில் முறைப்படி உபநயனம், வித்யாரம்ப சம்ஸ்காரங்கள் நடந்தன.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் தர்ப்பையை சேகரிப்பதற்காக வனம் சென்ற அன்னமய்யா, அங்கு திருமலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த பக்தர்களின் கூட்டத்தால் ஈர்க்கப்பட்டார். அவர்களுடன் சேர்ந்து நடந்து திருமலையை அடைந்து, வேங்கடவனை தரிசித்துப் பரவசம் அடைந்தவர் அங்கேயே தங்கி விட்டார். அவர் தனது 16 ஆவது வயதிலேயே "சங்கீர்த் தன யக்ஞுத்தைத்" தொடங்கி விட்டார்.

சாளுவ நரசிம்ம அரசனின் அழைப்பை ஏற்று பெனு கொண்டாவில் அரசனின் ஆதரவில் பாடல்களை இயற்றி வந்தார். அப்போது தான் "பதகவித பிதாமகர்" என்றழைக்கப்பட்டு புகழ் பெற்றார். "மாதவனைப் பாடிய வாயால் மானுடம் பாடேன்" என்ற கொள்கையுடையவராதலால் அரசனின் கோபத்திற்கு ஆளாகி சங்கிலியால் பிணைக்கப்பட்டு தண்டிக் கப்பட்டார். அந்த தண்டனையே அவரை சம்சார பந்தத்திலிருந்து விடு வித்து, விரக்தி மேலிடுமாறு செய்து, அவருக்கு முக்தி மார்க்கத்தைக் காட்டியது. தனது வாழ்க்கையின் இறுதி நாட்களை திருமலையான் சேவையிலேயே, (பாடுவது) கழித்து, பின் வந்த பதகவிஞர்களுக்கு முன் னோடியாகத் திகழ்ந்தார்.


தெலுங்கு மூலம் : டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம் : திருமதி ராதாராமநாதன், 93936 09240


அன்னமய்யா ஆரம்பித்த "பதகவிதா அர்ச்சனை" அவருடன் முடிந்து விடவில்லை. அவரது வம்சமே ஒரு "சாஹித்ய வனம்" எனலாம். அவரது வம்சத்தில் பூத்த ஒவ்வொரு மலருமே வேங்கடவனின் திவ்ய பாத பத்மங்களுக்கே அர்ப்பணமாயின. அன்னமய்யா "பத கவிதா பிதாமகர்" என்றால், அவரது மனைவி தாள்ளபாக்க திம்மக்கா தெலுங்கு மொழி இலக்கியத்தின் முதல் கவியரசி. அவரது குடும்பம் ஒரு தனித்தன்மை வாய்ந்த குடும்பம். அன்னமய்யா வம்சத்தில் அவருக்குப் பின் ஐந்து தலைமுறையினர் அவரவர் வழியில் அலமேலுமங்கை மணாளனைப்பாடி, தமது இலக்கிய மலர்களை மாலை யாக்கி சமர்ப்பித்தது இன்னுமொரு சிறப்பம்சம். திருமலை நாதனின் குண நலன்களைப் பாடுவதையே தனது மூச்சுக்காற்றாகக் கொண்டு வாழ்ந்து வந்த அன்னமய்யா வம்சம் குறித்து அறிந்து கொள்வது மிக அவசியம்.


**தாள்ளபாக்க வம்சம் :**

அன்னமய்யா நந்தவரீக பிராமண குடும்பத்தில் பிறந்தவர். நந்தவர அக்ரஹாரத்தைச் சேர்ந்தவர்கள் நந்தவரீதர்கள். இதனை அன்னமய்யா பேரன் சின்னன்னா இயற்றிய அன்ன மய்யா வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த வம்சத்தினர் குறித்தப் பின்ண ணியில் ஒரு வரலாறு உள்ளது. 10 ஆம் நூற்றாண்டில் இப்போதைய கர்நூல் மாவட்டத்தில் "நந்தவரம்" எனும் கிரா மத்தை நந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். இவன் பாண்டவ வம்சத்தைச்

சேர்ந்தவன் என்பது வழிவழியாக வந்த செய்தி. இவனுக்கு தினமும் விடியற்காலையில் கங்கைக்குச் சென்று நீராடி வர வேண்டும் என்ற விருப்பம் இருந்து வந்தது. தத்தாத்ரேயர் என்ற சித்த புருஷரிடம் மந்திரம் உபேதசிக்கப் பெற்று, மந்திர சக்தியைப் பெற்று, தினமும் விடியற் காலையில் சென்று, கங்கையில் நீராடி, சூரியன் உதயத்திற்கு முன்பே வீட்டிற்கு வந்து விடுவாராம். இவரது செயல்களை கவனித்து வந்த அவரது மனைவி ஒரு நாள் தன்னையும் காசிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, அவருடன் காசிக்குச் சென்றாள்.

கங்கையில் நீராடி எழுந்த பின் அவள் மாதவிடாய் ஆனதால், நந்தனின் மந்திர சக்தி பலனளிக்கவில்லை. எனவே நந்தன் அங்கு காசியில் இருந்த வேத விற்பன்னர் களைச் சரணடைந்தான். அந்த வேத பிராம்மணர்கள் பலகாலமாக உருப்போட்டு சேர்த்து வைத்திருந்த மந்திர சக்தியையெல்லாம் நந்தனுக்கு தாரைவார்த்துக் கொடுத்து, நந்தனும் அவர் மனைவியும் நந்தவரம் திரும்புவதற்கு உதவினர்.

அதற்குப் பிரதி பலனாக நன்றி கூறும் வகை யில் நந்தன் அந்த வேதியர்களுக்கு எப்போது எத்தகைய உதவி வேண்டு மானாலும் செய்வதாக கங்கா தேவியின் மறு வடிவமாக விளங்கும் சாமுண்டேஸ்வரி முன் உறுதியளித்து பிரமாணம் செய்தான்.



சிறிது காலத்திற்குப் பின் காசியில் பஞ்சம் எற்பட, காசி பண்டிதர்களுக்கு நந்தன் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வர, நந்த வரத்தை அடைந்து உதவி கோரி னர். தான் அளித்த சத்தியத்தை மறந்த நந்தன், நான் எப்போது சத்தியம் செய்தேன்? அதற்கு சாட்சி உள்ளதா" என்று கேட்டான். காசி அந்தணர்கள் அவனுக்கு நேரிடையாக பதிலளிக்காமல், நந்தராஜன் முன் சாட்சிக்கு வரு மாறு சாமுண்டேஸ்வரியையே அழைத்தனர். பக்தர்கள் அழைப்பிற்கு எப்போதும் காத்திருக்கும் சாமுண்டேஸ்வரி பிராம்மணர்களுக்கு அருள்பாலித்து நந்தனுக்கு உண்மையை உணர்த்தி னாள். தனது தவற்றை உணர்ந்த நந்தன், நந்தவரம் கிராமத்தை அவர்களுக்கு தானம் அளித்து அக்ர ஹாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தான்.

சாட்சியாக வந்த சாமுண்டேஸ்வரியை அங்கேயே இருந்து அருள்பாலிக்குமாறு வேண்டினான். அந்த அம்மனே சாட்சி மாதா சாமுண்டேஸ்வரியாக இன்றும் கோயில் கொண்டுள்ளாள், இந்த விவரங்கள் கௌனி பள்ளி ராமப்ப கவி எழுதிய சௌடேஸ்வரி மகாத்மியம் என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

நந்தவரம் அக்ரஹாரத்தில் வசித்த பிராம்மணர்கள் நந்தவரீகர்கள். அவர்களில் சிலர் கடப்பா மாவட்டத்தில் உள்ள ராஜம்பேட்டை தாலுக்காவிற்குட்பட்ட தாள்ள பாக்க கிராமத்தில் குடியேறி, தாள்ளபாக்கம் என்ற ஊரின் பெயரை இவர்களது வம்சத்தினர் ஏற்றனர். அன்னமய்யா முன்னோர்களைப் பற்றிய விவரங்கள் "அன்னமாச்சார்ய சரித்ர த்விபத" என்ற நூலின் 72,73ம் பக்கத்தில் காணலாம்.

இவர்கள் பரத்வாஜ கோத்திரத்தினர். அச்சலாயன சூத்திரத்தினர். நந்தவர வம்சத்தில் பிறந்த நாராயணன் வேதபாராயணம் செய்து வந்த விஷ்ணு பக்தர். அவருக்கு விட்ட லன் என்ற மகன் பிறந்தான். விட்டல னுக்கு நாராயணன் என்ற மகன் பிறந்தான். அந்த நாராயணனுக்கு நாராயண சூரி மகனாகப் பிறந்தார். அந்த நாராயண சூரியின் மகனே நமது அன்னமய்யா ஆவார்.

அன்னமய்யா ஸ்ரீநிவாசனின் அருளால் தன்னைப் போலவே ஹரி பக்தியுடன் கூடிய, கவிதை பாடும் திறனுடைய பிள்ளைகளைப் பெற்றார். அவரது முதல் மனைவி திம் மக்கா என்ற திருமலம்மாவின் குமாரன் நரசய்யாசார்யன். இரண்டாவது மனைவி அக்கலம்மாவின் குமாரன் திருமலாச்சார்யன். தொடரும்...

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருமலையில் ஆர்ஜித சேவைகள்

| வ. எண். | சேவைகளின் பெயர் | அனுமதிக்கப் படும் நபர்களின் எண்ணிக்கை | ஆஜராக வேண்டிய நேரம் | சேவை நேரம் | சேவையின் தொகை |
|---|---|---|---|---|---|
| | **தினசரி சேவைகள்** | | | | |
| 1. | சுப்ரபாதம் | ஒருவர் | காலை 2-00 | காலை 3-00 | ரூ. 120/- |
| 2. | தோமாலை சேவை (செவ்வாய், புதன், வியாழன்) | ஒருவர் | காலை 3-00 | காலை 3-30 | ரூ. 220/- |
| 3. | அர்ச்சனை (செவ்வாய், புதன், வியாழன்) | ஒருவர் | காலை 4-00 | காலை 4-30 | ரூ. 220/- |
| | **தினசரி உற்சவங்கள்** | | | | |
| 4. | கல்யாணோத்ஸவம் | இருவர் | காலை 10-00 | நன்பகல் 12-00 | ரூ.1,000/- |
| 6. | டோலோத்ஸவம் (ஊஞ்சல் சேவை) | ஒருவர் | காலை 11-00 | பிற்பகல் 1-00 | ரூ. 200/- |
| 5. | ஆர்ஜித பிரம்மோத்ஸவம் | ஒருவர் | பிற்பகல் 12-30 | பிற்பகல் 2-00 | ரூ. 200/- |
| 7. | வசந்தோத்ஸவம் | ஒருவர் | பிற்பகல் 2-30 | பிற்பகல் 3-00 | ரூ. 300/- |
| 8. | ஸஹஸ்ர தீப அலங்கார சேவை | ஒருவர் | மாலை 5-00 | மாலை 5-30 | ரூ. 200/- |
| | **வாராந்திர சேவைகள்** | | | | |
| 9. | விசேஷபூஜை (திங்கள்) | ஒருவர் | காலை 6-00 | காலை 6-30 | ரூ. 600/- |
| 10. | அஷ்டதளபாத பத்மாராதனம்(செவ்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ.1,250/- |
| 11. | ஸஹஸ்ரகலசாபிஷேகம் (புதன்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ. 850/- |
| 12. | திருப்பாவாடை சேவை (வியாழன்) | ஒருவர் | காலை 5-00 | காலை 5-30 | ரூ. 850/- |
| 13. | ஆடை அலங்கார சேவை (வெள்ளி) | இருவர் (தம்பதியர்) | காலை 3-00 | காலை 4-00 | ரூ.12,250/- |
| அ. | பூராபிஷேகம் (வெள்ளி) | ஒருவர் | காலை 3-00 | காலை 4-00 | ரூ. 750/- |
| 14. | நிஜபாத தரிசனம் (வெள்ளி) | ஒருவர் | காலை 4-30 | காலை 5-30 | ரூ. 200/- |
| | **வருடாந்திர சேவைகள்/உற்சவங்கள்** | | | | |
| 15. | தெப்போத்ஸவம் (பிப்ரவரி / மார்ச்) | ஒருவர் | மாலை 6-00 | இரவு 7-00 | ரூ. 500/- |
| 16. | வஸந்தோத்ஸவம் (மார்ச்/ஏப்ரல்) | ஒருவர் | பிற்பகல் 1-00 | பிற்பகல் 2-00 | ரூ. 300/- |
| 17. | பத்மாவதி பரிணயம் (மே) | ஒருவர் | மாலை 4-00 | மாலை 4-30 | ரூ.1,000/- |
| 18. | அபிதேயக அபிஷேகம் (ஜூன்) | ஒருவர் | காலை 8-00 | காலை 8-00 | ரூ. 400/- |
| 19. | புஷ்ப பல்லக்கு (ஜூலை) | ஒருவர் | மாலை 6-30 | இரவு 7-30 | ரூ. 200/- |
| 20. | பவித்ரோத்ஸவம் (ஆகஸ்டு) | ஒருவர் | காலை 8-00 | காலை 9-00 | ரூ.2,500/- |
| 21. | புஷ்பயாகம் (நவம்பர்) | ஒருவர் | காலை 8-00 | காலை 9-00 | ரூ. 700/- |
| 22. | கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் (வருடத்திற்கு நான்கு முறை) | ஒருவர் | காலை 10-00 | காலை 11-00 | ரூ. 300/- |

**இணைய தள பதிவு :**

மேல்காணும் சேவைகளை இணைய தளத்தின் மூலமாக பதிவு செய்து கொள்ள முடியும். மேலும் தகவல்களுக்கு தி.தி.தே. இணையதளம் www.tirumala.org/www.ttdsevaonline.com மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

**தொடர்புக்கு**

Call Center : 0877-2233333/2277777,
Toll Free No.:1800 425 4141,
1800 425 333333,
Whatsapp No.:9399399399
eMail:helpdesk@tirumala.org

# தாச சாகித்தியத்தில் திருவேங்கடவன்

பகவான் ஸ்ரீஹரியிடம் பக்தி கொண்டு அவரின் சிறப்பைப் போற்றும் விதத்தில் கன்னட பக்தர்களால் இயற்றப்பட்ட இலக்கியங்களின் தொகுப்பே “தாச சாகித்தியம்” ஆகும். கன்னடத்தில் “தாசா” என்றால் தாசன்/சேவகன். சாகித்தியா என்றால் இலக்கியமாகும்.

வேத தத்துவங்களை எளிய நடையில் பாமர மக்கள் வரை சென்றடைய, கர்நாடக சங்கீதத்தின் ஓர் வடிவாகிய “நாதோபாசனை” யின் மூலம் விஷ்ணு பக்தியை பரப்பினார்கள். ஸ்ரீமத்வாசாரியார் போதித்த த்வயத்தை பின்பற்றி, பக்தி அலையை வளர்த்த புரந்தர தாஸர், கனக தாஸர், விஜய தாஸர், ஸ்ரீபாதராஜர், வியாச ராஜர், வாதி ராஜா, கோபால தாஸ், ஜகந்நாத தாஸ் போன்றோர் சங்கீதத்தின் மூலம், கர்நாடக மாநிலத்தில் பகவத் பக்தியை பரப்பியவர்களாவர்.

மாபெரும் விஷ்ணு பக்தர், முனிவர் வைஷ்ணவ கவிஞர் என்று போற்றப்பட்ட புரந்தர தாஸர் த்வயத்தை பின்பற்றி புகழ்பெற்ற ஸ்ரீவியாசதீர்த்த முனிவரின் சீடராவார். தன்னுடைய செல்வம் அனைத்தையும் தானம் செய்து, ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள சமஸ்கிருத கருத்துக்களை எளிய வடிவில் இனிமையான சங்கீதத்தின் மூலம் பரப்பினார்.

புரந்த தாஸர் பரப்பிய பக்தி தத்துவம், இந்து மதத்தில் “நாரத பக்திசூத்திரம்” குறிப்பிடும் பக்தி தத்துவத்தின் அடிப்படையாகக் கொண்டுள்ளதாகும். அது ஸ்ரீஹரியிடம் சரணாகதி அடைந்து தூய்மையான அன்பாகிய பக்தியை பகவானிடம் செலுத்த போதிக்கின்றது. அவர் இயற்றிய அனைத்து பாடல்களும் வைஷ்ணவ சித்தாந்தத்தை பரப்பிய ஸ்ரீமத்வாசாரியாரின் போதனைகளை சார்ந்ததாகும்.


நிலையற்ற இம்மாய உலக சுகங்களிலிருந்து அகன்று, நாம் நமது தியானத்தை முழுவதும் தூய்மையான நிலையான பரம் பொருளை அந்த பகவானிடம் செலுத்தினால் பரமானந்தத்தினை அடையலாம். புரந்தர தாஸரின் கீர்த்தனைகளும் இத்தத்துவத்தையும், ஒரு மனிதன் உண்மையான வைஷ்ணவனாக எப்படி வாழ வேண்டும் என்பதனையும் உணர்த்துகின்றது. இங்ஙனே ஹரி தாசர்கள் வேதம், உபநிடதம் மற்றும் புராணங்களில் புதைந்து கிடந்த அரிய கருத்துகளை எளிய கன்னட மொழியில், இனிமையான சங்கீதத்தின் மூலம் திருவேங்கடவனின் புகழைப் பற்றி ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பக்தியுடன் இயற்றி, பாடி பகவத் பக்தியை பாமர மக்களிடம் வரை பரப்பினர்.

பகவத் பக்தியின் சிறப்பைப் பற்றிப் புராணம் மற்றும் தாச சாகித்திய தொகுப்பிலிருந்து சில விளக்கங்களை காண்போம்.

வெறும் கடமைக்காக தானம், தர்மம் முதலியவை செய்தால் பகவானின் உண்மை வடிவினை தரிசிக்கவோ அல்லது மோட்சமோ கிடைக்காது. இதனுடன் உண்மையான பக்தியும் சேர்ந்தால்தான் பகவத்கிருபை கிடைக்கும். ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில்,

*“நாஹம் வேதைர்ன தபஸா ந*
*தானேன ந சேஜ்யயா |*
*சக்ய ஏவம்விதோ த்ரஷ்டும்*
*த்ருஷ்டவாநஸி மாம் யதா ||”*

– கீதை 11:53



"அர்ஜுனா! நீ காணும் இந்த உண்மை வடிவினை வேதம் பயில்வதாலோ, கடும் தவத்தினாலோ, தானம் அல்லது வழிப்பாட்டினாலோ கானவோ, புரிந்து கொள்ளவோ இயலாது" என்கிறார்.

"பக்த்யா த்வநந்யயா சக்யா அஹமேவம்விதோ Sர்ஜுன |
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப ||"

– கீதை 11:54

"அர்ஜுனா! பரிபூரண பக்தியுடன் செய்யும் சேவையால்தான், நீ காணும் இந்த உண்மை வடிவினை யாராயினும் பார்க்கவோ, புரிந்து கொள்ளவோ முடியும். இதனால் (பக்தியால்) மட்டும்தான் நீ என்னை புரிந்து கொள்ளும் பாதையில் சஞ்சரிக்க முடியும்" என்கிறார்.

"பகவத் பக்தி" தான் மேன்மையானது என்று பல மகான்கள் கூறியுள்ளனர். அங்ஙனே சில வரிகளை கீழே காண்போம். பாகவதத்தில் பக்த பிரகலாதர்

''மன்யே தனாபி... பகவான் நநு யூதபாய'' என்றும்
''தபமுன் வம்ஸமு தேஜமுன்... சம்யுக்துடை''

– போதனா, ஆந்திர மஹாபாகவதம்.

இதனையே ஸ்ரீவிஜயதாசரும் ''தான தர்ம கே சிலுகா... பக்தினி கணு தினா'' என்றும் கூறியுள்ளார்.

வியாஸ தாசர் சாகித்தியத்தின்படி "பகவானின் க்ருபை தானம், தர்மம், ஸ்நான, மௌனமேயன்றி, கானம், யாகம், யக்ஞம் மற்றும் பரிசுகள் கொடுப்பதனால் அல்ல. தபம், ஹோமம் மற்றும் விரதம் மட்டுமன்றி பரிபூரண பக்தி இருத்தல் வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீபுரந்தர தாஸர், "சகல சாதனகெல்ல சித்தி கொளிசுது பக்தி சாதன வல்ல தன்ய உண்டே" என்று பாடுகிறார். அதாவது, பக்தி ஒன்றால் மட்டும்தான் நாம் விரும்பும் அனைத்தையும் நமக்கு தரவியலும் என்றும், பக்தியே மேன்மையானது என்றும் கூறுகிறார். பக்தி என்றால் என்ன? அது எப்படி இருக்க வேண்டும்? ஹரிதாசர்களின் விளக்கம்:

ஜகத்குரு ஸ்ரீமத்வாசாரியார் கூறுகிறார்.

"மஹாத்ம்ய: ஞான பூர்வஸ்து ஸுத்ருட
சர்வதோஉதிக: |
ஸ்னேஹோ பக்திரிதி ப்ரோக்த
ஸ்தயாமுக்திர்நசாந்யதா ||"

அதாவது நாம் பகவானிடம் செலுத்தும் அன்பின் பெயரே பக்தி. அது ஞானம் இத்யாதிகளைக் காட்டிலும் முதன்மையானதும் ஸ்ரேஷ்டமானதுமாகும். அதுவே "மோட்சம்" கிடைப்பதற்கு வழி.

வாழ்க்கையில் என்ன அச்சுறுத்தல் வந்தாலும், மனிதனின் உண்மையான பக்தி உணர்வை எதனாலும் அசைக்க முடியாது. அதனையே "சுத்ருத பக்தி" என்பர். ஒருவனது வாழ்க்கையில் அவனது குடும்பம், மனைவி, மக்கள், செல்வம் போன்றவற்றை விட பகவானே உயர்ந்தவர் எனும் பக்தியே, ஒருவனது வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

இக்கருத்தை மேற்கொண்டு ஸ்ரீமஜ்ஜயதீர்துலு பக்தியைப் பற்றிய தனது கருத்தினை இங்ஙனே விரிவாகக் கூறுகிறார்.

பக்தியினாலேயே ஒருவன் பகவானின் க்ருபையை பெற இயலும், ''பரமேஸ்வர பக்திர் நாம நிரவதிகா நந்தநவத்யதா...'' என்று கூறப்பட்டுள்ளது. அதாவது பகவத் க்ருபையை பக்தியை தவிர வேறு எதனாலும் பெற இயலாது.

"பக்த்யார்தான்யகிலான்யேவ பக்திர்மோக்ஷாய
கேவலா |
முக்தா நாமபி பக்திர்ஹி நித்யானந்த ஸ்வரூபிணி ||"

அனைத்தும் பக்தி மயமே. பக்தி எங்கிருக்கிறதோ மோட்சமும் அங்கிருக்கும். பக்தியே பரமானந்தத்தை அடைய மேன்மையான வழி.

"க்ஞானபூர்வ: பர: ஸ்னேஹோ நித்யோ
பக்திரிதீர்யதே'"

பக்தியே ஞானத்தைக் காட்டிலும் மேன்மையானது.

ஜகத்குருவும் இக்கருத்தையே சுட்டிக்காட்டுகிறார். அதாவது "பக்தியே பகவத் க்ருபை அடைவதற்கும், அதனைப் பின்பற்றினால் "மோட்சம்" உறுதி" எனவும் கூறுகிறார். பக்தி எங்ஙனே இருக்க வேண்டும்?

"பக்த்யை வதுஷ்டிமப்யேதி விஷ்ணுர்நாந்யேன
கேநசித் |
ச ஏவ முக்திதாதா ச பக்திஷ்த த்ரைவகாரநம் ||"

பக்தி என்றால் தூய்மையானதாக, கலப்படமில்லாத அன்பாக இருத்தல் வேண்டும். ஹரிதாசர்களும், ஆசாரியர்கள் கூறிய கருத்தை ஆதரித்து, பக்தர்களுக்கு

“ஆமலபக்தி” என்றால் என்ன என்றும், மூன்று “சரணங் களை” எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பதனையும் விளக்கி பரப்பினார்கள்.

புரந்தர தாஸர் கூறுகிறார். *“பக்தி கெமூரு... விரக்த தனதலிபாலி”* என்றும், “ப்ரேம ப்ரீதி..” *“தானம்ரு தவனு உநபேகு”* என்றும், *“ரோம ரோமனு கோமல வாகி... சமத்ருஷ்டி குடபேகு”* என்றார். அதாவது ஆன்மீக ஞானம் உள்ளவர்களால் இம்மூன்று குணங்களின் (ப்ரேமை, ப்ரீதி, ரதி) முக்கியத்துவத்தை உணர முடியும். இவற்றி னையே நாம் படிப்படியாக பகவானிடம் சமர்ப்பிக்க வேண்டும். “முக்தி”யின் மகிமையை அறிந்தவனே இதனை கடைபிடித்து வாழ்க்கையில் பக்தியின் மகத் துவத்தை அறிய முடியும்.

*“ஜிஹ்வமே மதுமத்தமா!” “வாங்மயம் தபா உச் யதே”, “ப்ரியம் ப்ரூயாத்”* என்னும் வாக்குகளுக்கேற்ப, சேவை மனப்பான்மை கொண்டு, தூய்மையாக இருந்து, பிறரை மன்னிக்கும் மனப்பான்மை முதலிய நற்குணங் களை வளர்த்து, பிறகு, நண்பன் – பகைவன், பெருமை – சிறுமை, வெப்பம் – குளிர், சுகம் – துக்கம் முதலியவை களில் சமநிலையான மனோபாவத்தை கொண்டு வர வேண்டும். *“நித்ய நித்ய... சத்யதலியபேகு”, “உத்த மோத்தம வஸ்து த நிஜ சுக... வைராக்யத சுக தோடபேகு”* என்று ஹரிதாசர்கள் கூறுவார்கள். அதாவது ஒருவர், “நித்யம்” மற்றும் “அநித்யத்தின்” வித்தியாசத்தை புரிந்து, இந்த வாழ்வே இறைவனின் அருளால் கிடைத்தது என்பதனை உணர்ந்து வாழ வேண்டும்.

*“சத்யம் ப்ரூயாத்! “சத்யம் ப்ரிய ஹிதம் ச யத்!”* என்று சொல்வார்கள். அதே போன்று சத்தியத்தை உணர்ந்து, சத்ய வாழ்க்கையை கடைபிடித்து, அனைத்திலும் அந்த பரம சத்தியத்தைக் கண்டு தர்ம நெறியில் வாழ வேண்டும். அந்த சத்தியம் என்னவென்றால் “ஸ்ரீமந்நாராயணனே மூல பொருள்” என்பதாகும். அதனை உணர்ந்து பக்தியை வளர்த்து, இறைவனே கதி என்று வாழ முயல வேண்டும்.

*“சோஹ்யசொன்னியசூத்ர... மோநி முரியபேகு”* மற் றும் *“ந்யாய நீதிய நெலெ நிபவனு... ஸ்திர விரபேகு”* என்று கூறியுள்ளனர். அதாவது, “த்வைத” பாவத்தை மனதில் நிறுத்தி, ஸ்ரீஹரியை என்றும் வழிபட்டு, மனதை “மாயை” யில் லயிக்க விடாமல், பகவானிடம் செலுத்தி, தர்ம நெறியை பின்பற்றி, பகவானின் புகழைப் பாடி, போற்றி அவரிடம் சரணாகதி அடைந்தால், இந்த வாழ்வில் சிறப் புற வாழ்ந்து, இறுதியில் “மோட்சம்” கிடைத்து பகவானின் பொற்பாதங்களை அடையலாம். இதுவே ஹரிதாசர்கள் தங்கள் தாச சாகித்தியத்தில் பறைசாற்றுகின்றார்கள்.

தெலுங்கு மூலம்:
திரு.சுஸ்வரம் நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திருமதி பா. காயத்ரி, 9744657115

தொடரும்...




1. அத்ரி-அனுசுயா தம்பதிகளுக்கு பகவான் எந்த உருவில் அவதரித்தார்?
2. பகவான் யார் உள்ளிருந்து ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறார்?
3. ஸ்ரீஹரி யாருடைய ஷதே ஸ்தன்ய பானம் செய்தார்?
4. பகவானின் மனிதிலிருந்து பிறந்தவர் யார்?
5. தக்ஷப்ரஜாபதி செய்த யாகத்தின் பெயர் என்ன?
6. யாக குண்டத்தில் விழுந்து தேகத்தியாகம் செய்தவர் யார்?
7. சிவனின் முடியிலிருந்து அவதரித்தவர் யார்?
8. தக்ஷனின் சிரசை துண்டித்தவர் யார்?
9. சுவயம்பு மனுவின் இரு புதல்வர்கள் யார்?
10. நாபி ராஜா செய்த யாகம் எது?

திருமதி என். ஹேமா,
திருப்பதி, 77020 15076

விடைகளுக்கு 51ம் பக்கம் பார்க்கவும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# கார்வேடி நகரம்
# ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

2020, மே 15 முதல் மே 23 வரை



**15-05-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**16-05-2020**
**சனிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**17-05-2020**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**18-05-2020**
**திங்கட்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**19-05-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**20-05-2020**
**புதன் கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**21-05-2020**
**வியாழக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**22-05-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**23-05-2020**
**சனிக்கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

**24-05-2020**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : புஷ்பயாக மஹோத்ஸவம்

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# 14-02-2020 முதல் 23-02-2020 வரை நடைபெற்ற திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ திருக்காட்சிகள் மற்றும் கலைக்குழுவினரும்













## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# 14-02-2020 முதல் 22-02-2020 வரை நடைபெற்ற ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ திருக்காட்சிகள் மற்றும் கலைக்குழுவினரும்














### திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## 05-03-2020 முதல் 09-03-2020 வரை நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவ திருக்காட்சிகள்







# ஸ்ரீபகவத் ராமாநுஜரும் வைணவப் பெண்களும்


– திரு. வி. சீனிவாசன், இறவாங்குடி, 98428 12243

*"வாழி யெதிராஜன், வாழியெதிராஜன்*
*வாழி யெதிராஜன் என வாழ்த்துவார் - வாழியென*
*வாழ்த்துவார், வாழியென வாழ்த்துவார் தாளிணையில்*
*தாழ்த்துவார் விண்ணோர் தலை."*

ஸ்ரீபகவத் ராமாநுஜர் ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வம் எனக் கூறி, அவரின் பெருமைகளை எடுத்துக் கூறியும், வைணவத்தை இமயம் முதல் கன்னியாகுமரி வரையிலும் சென்று, அனைத்து வைணவக் கோயில்களிலும் திருப்பணிகள் செய்தும், ஆங்காங்குள்ள கோயில்களில் ஆராதனைக் கிரமங்களையும் ஏற்படுத்தி வகைப்படுத்தினார். அந்தந்த கோயில்களின் நிர்வாகப் பொறுப்பை நிர்வகிக்க அங்கு ஒரு குழுவை நியமித்து நிர்வகிக்கச் செய்தார். சாதி மத பேதமின்றி ஸ்ரீமந்நாராயணனை வணங்குபவர்கள் யாவரும் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்ற கோட்பாட்டைக் கொண்டு வந்தார். ஸ்ரீராமாநுஜர் வாழ்நாளில் நிகழ்த்திய லீலா வினோதங்கள், கைங்கர்யங்கள், அவரின் குருபக்தி, அவர் வைணவத்திற்கு ஆற்றியத் தொண்டு, அதனால் அவர் அடைந்த துன்பங்கள், அவர் பெற்ற வெற்றிகள் ஆகியவற்றையும் அவரின் பெண்பால் பக்தைகள் பலரிடம் அவர் காட்டிய பரிவும், அவர் கட்கு அருளிய அருள் உரைகளும், கொடுத்த பட்டங்களும் எவை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

### திருவாலித் திருநகரியில் அரிசனப்பெண் :

பகவத்ராமாநுஜர் ஒரு நாள் தன் சீடர்களுடன் திருமங்கை யாழ்வார் பிறந்த ஊராகிய திருக்குறையலூர் சென்று கொண்டிருந்தார். திருவாலித் திருநகரியிலிருந்து ஒரு அரிசனப் பெண் அவர்கட்கு முன் சென்று கொண்டிருந்தார். அப்பெண்மணியைப் பார்த்து ஸ்ரீராமாநுஜர் அம்மணீ கொஞ்சம் நீங்கள் ஒதுங்கி வழிவிட்டால் நாங்கள் சென்று விடுவோம் என்று கூற, கூட்டத்தில் இருந்தவர்களும் அப்படியே கூற அப்பெண் சிறிதும் ஒதுங்கவில்லை. அதற்கு மாறாக சொன்னாள் அப்பெண்மணி "என்னை எங்கே ஒதுங்கச் சொல்கிறீர்கள்" வலது பக்கம் ஒதுங்கலாம் என்றாலோ அது திருமங்கை ஆழ்வாருக்கு பகவான் திருமந்திரம் உபேதசித்த இடம், இடது பக்கம் ஒதுங்கலாம் என்றால் திருவாலித்திருநகரியில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் உறையுமிடம். உலகம் முழுவதும் உலகளந்தான் சந்நிதியாயிற்றே என்று கூறினாள். ஸ்ரீராமாநுஜரோ அந்தப் பெண்மணியிடம் அம்மா என்னை மன்னிக்க வேண்டும். வயது முதிர்ந்தவுடன் ஆணவமும் முதிர்ந்து அறிவுக் கண்ணை மறைத்து விட்டது. இந்தக் கர்வம் பிடித்தத் துறவியைக் காட்டிலும் வைணவச் சின்னங்கள் உனக்கேத் தகும் என்று சொல்லி அவளை வைணவியாக்கினார். கோயிலில் பகவானுக்கு அருகில் அப்பெண் உருவச்சிலை இன்றும் இருக்கிறது.



### நம்மாழ்வார் திருநகரியில் இருபெண்கள் :

பகவத்ராமாநுஜர் தம் சீடர்களுடன் நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரி செல்லும்போது எதிரில் அகப்பட இரண்டு பெண்களிடம் திருக்குருகூர் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி குலுங்க நகைத்து திருவாய்மொழி பாடமில்லையோ? என்றாளாம். அதற்கு ஸ்ரீராமாநுஜர் உண்டு என்றாராம். அதற்கு அவள் கூவுதல், வருதல் என்ற திருவாய்மொழி பாசுரம் நினைவில்லையோ? என்றாளாம். தெரியும், தெரியும் என்று சொன்ன இராமாநுஜர் அப்பெண் மணிக்கு தண்டனிட்டாராம்.

கூவுதல், வருதல் என்றால் கூப்பிடு தூரம் என்று பொருள் உணர்ந்து கொண்டு, அந்த பெண்மணியின் நுண் அறிவைப் பாராட்டி தன் வணக்கத்தைச் சொன்னாராம். அப்பெண்கள் வீட்டிற்கு வந்து தந்தையிடம் நடந்த விபரங்களை எடுத்துக் கூறினர். பெண்களின் தந்தையார் எம்பெருமானாரிடம் வந்து தன் குழந்தைகள் செய்த அப்பிழையை மன்னித்து ஆசீர்வதிக்க வேணுமாய் வேண்டினார்.

## திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம் :

ஒரு சமயம் ஸ்ரீராமாநுஜர் சீடர்களுடன் மதுர கவியாழ்வார் பிறந்த ஊராகிய திருக்கோளூருக்குப் போய்க் கொண்டிருந்தார். அப்போது ஒரு பெண்மணி எதிரே வந்தாள். இராமாநுஜரைக் கண்டதும் தண்டனிட்டு நின்றாள். இராமாநுஜர் அவளைப் பார்த்து நம்மாழ்வார் பாசுரத்தில் *"புகும் ஊர் திருக்கோளூரே"* என்று வருகிறதே அம்மா, நீயும் அங்கிருந்து தான் வந்து கொண்டிருக்கிறாயா என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி சொன்னாள். சுவாமி முயல்புழுக்கை வயலிலே கிடந்தால் என்ன வரப்பிலே கிடந்தால் என்ன? ஞானம் சிறிதுமில்லாத அடியேன் திருக்கோளூரில் இருந்தால் என்ன? வெளியே இருந்தால் என்ன? என்று பதில் சொன்னாள். அறிஞர் கூட்டத்திலோ, அன்பர் கூட்டத்திலோ வைத்து எண்ண, எனக்கு என்ன தகுதியிருக்கிறது? நான் என்ன,

1) அழைத்து வருகின்றேன் என்றேனோ அக்ரூரைப்போல

2) அகம் ஒழித்துவிட்டேனோ விதுரரைப் போல

என்று இதைப்போல் எண்பது வரிகள் கூறி பகவத் இராமாநுஜரின் தொடர்புடைய சில வார்த்தைகளையும் சொன்னார்கள். இதிலிருந்து இராமாநுஜர் தம் செயல் இத்தேசமெங்கும் பரவியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார். இந்த நிகழ்வு வைணவத்தில் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரகசியம் என்று மிகவும் பிரசித்துப் பெற்று விளங்குகிறது. இவ்வாறு அவர் சென்ற இடமெல்லாம் அவர் புகழ் பரவிக் கிடக்கிறது என்பதுதான் உண்மையான வரலாறாகும்.

## ஸ்ரீராமாநுஜர் கொங்குநாடு செல்லுதல் :

ஸ்ரீராமாநுஜர் கொங்குநாடு சென்று அங்கு சேலாஞ்சலாம்பா என்ற அம்மையார் வீட்டில் தங்கினார். அவளோ ஏராளமான போஜன பதார்த்தங்கள் வீட்டில் இருக்கிறது. நானும் சாப்பிடவில்லை. வந்திருப்பவர்



களும் ஒன்றும் சாப்பிடாது இருக்கிறார்கள். நான் எவ்வளவு பிரார்த்தித்தும் உண்ண மறுக்கிறார்களே. ஒரு வேளை நான் என்ன ஜாதியோ என சந்தேகிக்கிறார்களோ? என எண்ணி அவர்களிடம் சென்று "அய்யா நீங்கள் நான் என்ன சாதியோ? என்று சந்தேகப்பட வேண்டாம். நான் ஸ்ரீபகவத் இராமாநுஜரின் சிஷ்யை. அதனால், கிடைத்த சேவையை விட மனமில்லை என்று கூறி உணவருந்த ஒப்புக்கொள்ள வேண்டினாள். அதற்கு அந்த கூட்டத்திலிருந்தவர்கள் நீயோ இந்த காட்டில் வேட்டைக்காரன் வீட்டில் இருக்கிறாய். உனக்கு எப்படி இராமாநுஜர் தரிசனம் கிடைத்தது எனக் கேட்டனர். அதற்கு அப்பெண்மணி எங்கள் ஊரில் 12 ஆண்டுகளாக மழையில்லை. நாங்கள் திருவரங்கம் வந்திருந்தோம். அப்போது இராமாநுஜர் தெரு வழியாகப் பிச்சைக்கு வந்து கொண்டிருந்தார். நானும் ஒரு நாள் அவருக்கு பிச்சை அளித்துவிட்டு, அவரை மறித்து நின்றேன். அதற்கு அவர் "ஏன் என்னை மறித்து நிற்கிறாய்" என்று கேட்டார். ஐயா எனக்கு ஒரு சந்தேகம். "நீங்கள் பிச்சை எடுக்கிறீர்கள். ஆனால் ராஜாக்கள் தங்கள் தரிசனத்திற்கு காத்துக் கொண்டிருக்கிறார்களே? இது என்ன விந்தை" என்று கேட்டேன்.

அப்படியானால் "எனக்கு அதை உபதேசியுங்கள்" என வேண்டினேன். அவரும் உபதேசித்தார். அம்மா நீ ரொம்ப புத்திசாலி எனப் பாராட்டினார். மறுநாளும் இப்பக்கமாக வந்தார். நான் பிச்சை அளித்து மீண்டும் மறித்து, மந்திரத்தினம் மறந்துவிட்டது. மீண்டும்

உபதேசியுங்கள் என்றேன். அவரும் உபதேசித்தார். பின்பு அவரது பாதுகையை வேண்டி நின்றேன். அவரும் அளித்தார். அன்றிலிருந்து அதை பாதுகாத்து பூஜை செய்து வருகிறேன் எனக் கூறினார்.

பின்பு எங்கள் நாட்டில் மழை பெய்யவே நாங்களும் எங்கள் ஊர் வந்துவிட்டோம். பின்பு அவர் தரிசனம் எங்களுக்கு கிடைக்கவில்லை என்றார். அதைக் கேட்ட ஸ்ரீராமாநுஜர் அம்மா நீ ஸ்ரீராமாநுஜர் சிஷ்யை. அவர் பாதுகையை வேறு ஆராதிக்கிறாய். ஆகவே நீ ஒரு வைஷ்ணவிதான். உணவு தயார் செய். நாங்கள் உணவருந்துகிறோம் என்றார்.

சேலாஞ்சலம்பாவும் குளித்து மடிவஸ்திரம் உடுத்தி பாதுகைக்கு திருவாராதனம் செய்து குருபரம்பரை, த்வயம், திருமந்திரம் அநுசந்தித்து பாதுகையை அலம்பி தீர்த்தம் பிரோக்ஷித்து, தளிகை பண்ணி, ஆராதனைக்கு வரவேண்டும் என பிரார்த்திக்க, பகவத் இராமாநுஜர் பாதுகையை பார்க்க வேண்டும் என்று கேட்கவும், அட்சதையுடன் கூடிய அந்தப் பாதுகையைக் காட்ட, கடாட்சித்து அவர் மந்திரம் நினைவிருக்கிறதா? எனக் கேட்க, அதையும் அவர் காதில் இரகசியமாக ஓதினாள். அப்படியானால் இதில் யார் இராமாநுஜர் எனக் கேட்க, அவளும் ஒவ்வொருவர் பாதத்திலும் அதைப் போட்டு பார்த்து இல்லை எனக் கூற, இராமாநுஜர் பாதத்தில் போட்டு கண்டு கொண்டார். இவர் தான் இராமாநுஜர் என உளம் மகிழ்ந்து அப்போது காஷாயம், திரிதண்டம் இருந்தது, இப்போது இல்லை எனக் கூறினார். உடனே இராமாநுஜர் நான்தான் இராமாநுஜர். உனக்கு மந்திரம் உபதேசித்த குரு, திருவரங்கத்தில் ஒரு ஆபத்து காரணமாக புறப்பட்டு இங்கு வரலாயிற்று எனக் கூறி, அவர்கட்கு அருளி, அவளது கணவனுக்கு பஞ்ச சமஸ்காரம் பண்ணி, “கோவிந்ததாசன்” எனப் பெயரிட்டு வைணவராக்கிவிட்டு அங்கிருந்து சென்றார்.

**இலட்சிக்கு மோட்சம் :**



ஸ்ரீமத் பகவத் இராமாநுஜர் திருமலையில் உள்ள அனந்தாழ்வானின் மலர்த் தோட்டத்தைப் பார்க்க தன் சீடர்களுடன் நடந்து சென்று களைத்து அமர்ந்திருந்தபோது, தொண்டியூர் கொண்டி என்று அழைக்கப் படும் இடைச்சிப் பெண் தயிர் விற்றுக் கொண்டு வந்தாள். அவளிடம் ஸ்ரீராமாநுஜர், அம்மா எனக்கு களைப்பாக இருக்கிறது. தயிர் என்ன விலை



என்று கேட்டார். அவளும் அந்த வைணவக்கோஷ்டியைப் பார்த்தவுடன் திருமலை சீனிவாசனைப் பார்த்த மாதிரி உணர்ச்சி ஏற்பட்டு விலை சொல்லாமலேயே தயிரைக் கொடுத்தாள். அவர்கள் தயிரைப் பருகும் அழகைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். வைணவப் பக்தர்களைக் கண்டதும் அவர்கள் தயிர் பருகும் அழகைப் பார்த்ததும் பக்தியும், ஞானமும் உண்டாகி விட்டது.

அவர்கள் தாங்கள் கொடுத்த தயிருக்கு எவ்வளவு பணம் என்று கேட்டனர். ஐயா எனக்கு பணம் வேண்டாம். சம்சாரபந்தம் விட்டு நல்ல மோட்ச மார்க்கத்தில் போக வழி சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார். இராமாநுஜர் அவளிடம் அம்மா உன்னால் மோட்சகதியடைய முடியும். எங்களுக்கு மோட்சம் கொடுக்க அதிகாரமில்லை. அதைக் கொடுப்பவர் திருமலையின் மீது இருக்கிறார். அவனைப் போய் கேள் என்றார். அதைக் கேட்ட தொண்டியூர் கொண்டி பதில் சொன்னாள். அவர் பேச மாட்டார். தாங்கள் ஒரு சீட்டு எழுதி சிபாரிசு செய்து எனக்கு மோட்சம் அளிக்கும்படி எழுதிக் கொடுங்கள் எனக் கேட்டாள். இராமாநுஜரும் அப்படியே இசைந்து சீனிவாசப் பெருமாளுக்கு ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தார். கூடியிருந்தவர்கள் எல்லாம் இது என்ன விநோதம் என திகைத்து நின்றனர்.

தொண்டியூர் கொண்டி ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்நானம் செய்து பிரதட்சணமாக வந்து ஸ்ரீநிவாசனிடம் சீட்டை கொடுக்கும்படி அர்ச்சகரை தண்டனிட்டு வணங்கி கொடுத்தாள். அர்ச்சகரும் தொண்டியூர் கொண்டி கொடுத்த சீட்டை பெருமாளிடம் கொடுத்தார். பெருமாளும் கை நீட்டி வாங்கிக் கொண்டார். இது இராமாநுஜரால் கொடுக்கப்பட்ட சீட்டு என கிரகித்து மோட்சம் கொடுத்தேன் என்றருளினார். உடனே பிரகாசமான ஒளியுடன் விமானம் வர தொண்டியும் அமர்ந்து பரமபதம் சேர்ந்தார்.



அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச் செயல் – 3

# இல்லறமே நல்லறம்

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்கள் காட்டிய வாழ்வியல் நெறிகளைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும் நாம் முதல் நிகழ்வாக விவாஹம் எனப்படும் திருமண வைபவத்தில் இருந்து மங்களகரமாகத் துவங்கலாம்.

விவாஹம் என்பது வி+வாஹம் அதாவது சிறப்புடையதாக வகித்தல் என்கிற பொருளில் வருகிறது. உத்+வாஹம் அதாவது "மேன்மையாக வைத்தல்" அல்லது "தாங்குதல்" என்றும் பொருள் வரும்.

யார் யாரைத் தாங்குவது? இல்லற தர்மத்தை கணவனும் மனைவியுமாகச் சேர்பவர்கள் இணைந்து தாங்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

உலகில் நான்கு வகை பொருள் உண்டு. அறம், பொருள், இன்பம், வீடு (பேறு). இதில் அறம் என்பது தான் தலையாயது. அது இல்லறத்தில் இருந்து தான் தொடங்குகிறது. இல்லத்தில் இருந்து நடத்துவதால் இந்த அறமானது இல்லறம் என்று சொல்லப்படுகின்றது.

இல்லறம் ஒன்றே நல்லறம். இதுவே பொருள். இதுவே இன்பம். இதுவே மோட்சம் தரும் வாழ்வியல் நெறி. இதை முறைப்படி வாழ்ந்து விட்டால் சுவர்க்கம் நம் காலடியில். மோட்சம் நம் வாழ்வின் முடிவில்.

துறவறம் என்பது எத்தனை உயர்ந்ததாக இருந்தாலும் கூட அது இல்லறத்தை சார்ந்து நிற்பது ஆகும். தன்னையும் காத்துக் கொண்டு மற்ற உயிர்களையும் காப்பது இல்லறத்தின் பொதுப்பண்பு. இல்லறத்தார்க்கே எல்லா தர்மங்களும் எல்லாவிதமான யாகங்களும் விரதங்களும் கடைப்பிடிக்க சொல்லியிருக்கின்றார்கள்.

உலகில் இல்லற தர்மம் நலியும்போது உலகம் நாசத்தை நோக்கி நகரும். திருவள்ளுவர் எழுதிய திருக்குறளைத் தொகுத்தவர்கள் அறன் வலியுறுத்தல் என்கிற அதிகாரத்திற்கு அடுத்தபடியாக இல்வாழ்க்கையை வைத்தார்கள்.

இதன் சிறப்பை சொல்ல வந்த திருவள்ளுவர்

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' என்று சொன்னார்.

வாழ்வின் இரண்டு நோக்கங்கள் அன்பு மற்றும் அறம். அன்பில்லாத அறம் வளராது. அன்பில்லாது அறமும் தனியாக இருக்காது. எது அறம் என்று அடுத்து வள்ளுவர் சொல்ல வரும் பொழுது ''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'' என்கிறார்.

இரண்டு ஆண்களும் அல்லது இரண்டு பெண்களும் இணைந்து எத்தனை அன்புடன் வாழ்ந்தாலும் அது இல்வாழ்க்கை ஆகாது. காரணம் இல்வாழ்வின் மிக மகத்தான பணி சந்ததிகளை உருவாக்குதல். "நன்மக்கட் பேறு" என்று இதனைச் சாத்திரம் சொல்லும்.



ஓம் ப்ரிபங்கு-ப்ரிய-பக்ஷாய நம:

எனவேதான் திருமணம் எனப்படும் இல்லற தர்மத்தை ஸ்ரீவைஷ்ணவ மரபு வலியுறுத்துகிறது.

திருமாலும் திருமகளும் சேர்ந்தது தான் வைணவம். இந்தப் பிரபஞ்சத்தைக் காப்பது திருமாலும் திருமகளும் இணைந்த நிலையில். இந்த இரட்டை தான் நமக்கு காப்பு என்று ஆசார்யர்கள் சொல்லுவார்கள். “இந்த மிதுனமே நமது உத்தேச்யம்” என்று சொல்லுவார்கள்.




இதை அழுத்தமாகச் சொல்ல வந்த நம்மாழ்வார் திருமகளோடு சேர்ந்தே திருமாலைப் பார்க்கிறார். **“அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா”** என்று தொடங்குகிற பாசுரமும், **‘‘திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்’’** என்று தொடங்குகிற பாசுரமும், இதனை உணர்த்துகின்றன. இறைவன் இறைவியோடு இருப்பதுபோல, இவ்வுலகில் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழச் செய்யப்படும் சம்ஸ்காரம் தான் “விவாஹம்” எனப்படுகிறது.

ஒரு மனிதனின் வாழ்நாளில் நடக்கும் மிகச் சிறந்த – மிக அவசியமான பொருளுள்ள நிகழ்வு இது. இது அவசியம் என்பதால் தான் இதனை எப்படி நடத்துவது என்னும் முறையை பெரியவர்கள் வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக இதற்கான வழி முறைகளை வேதத்தில் இருந்து ஆபஸ்தம்பர் சூத்திரங்களாகத் தொகுத்துக் கொடுத்துள்ளார்.

இதனை அப்படியே நமது ஆண்டாள் நாச்சியார், நாச்சியார் திருமொழியின் ஆறாவது திருமொழியான “வாரணம் ஆயிரம்” என்று தொடங்கும் திருமொழியில் அருளிச் செய்திருக்கிறார். “பகவானுக்கு இடாத அன்னமும், வாரணம் ஆயிரம் அனுசரிக்காத திருமணமும் பயனற்றவை” என்றே வைணவ மரபு சொல்லுகின்றது.

திருக்கோயிலிலே இறைவனுக்கும் இறைவிக்கும் நடக்கும் திருமணத்தில் வாரணம் ஆயிரம் சேவிக்கிறார்கள். ஸ்ரீவைஷ்ணவர்களும் தங்கள் திருமாளிகையில் நடக்கும் திருமண வைபவத்தில் ஆண்டாள் திருக்கல்யாண விஷயமாக அருளிய இந்தப் பாசுரங்களை சேவித்து நிறைவுபடுத்துகின்றார்கள். சீர் பாடல் என்றும் இதனைச் சொல்வார்கள்.

இது தான் திருமணத்தின் சீர். பெரும்சீர். பெறும் சீர். இதனை உச்சரிக்கும் உதடுகள் அட்சர லட்சம் பெற்ற பயனை அடையும் நலனை அனுபவிக்கும்.





வேதம் வேறு, தமிழ் வேதம் வேறு அல்ல. வேத வாக்கியத்தை மறுத்து எந்தப் பாசுரங்களையும் ஆழ்வார்கள் அருளிச் செய்யவில்லை. வேதத்தின் அர்த்தத்தை அழுத்தமாகச் சொல்லும் பாசுரங்கள் இனிய தமிழில் பாடப்பட்டவை. வையத்தில் வாழும் மனித குலம் நற்பலன் அடைய நாராயணனின் அருளை பெற்றுத் தரும் ஆற்றல் வாய்ந்தவை.



இந்த வாரணமாயிரம் பாசுரத்தில் திருமணத்தில் நடக்க வேண்டிய முக்கியமான நிகழ்வுகளை பட்டியலிட்டுக் காட்டுகின்றார் ஆண்டாள் நாச்சியார்.



1) திருமண ஏற்பாடுகளைச் செய்தல் – மங்கலப் பொருட்களை அமைத்தல்.

2) மண்டபம், வீதிகள் முதலியவற்றை அலங்கரித்தல்.

3) மணமகனை ஊர்வலமாக அழைத்து வருதல்.

4) மணமேடையை அலங்கரித்து அங்கே முகூர்த்த நாள் குறித்தல்.

5) மாலை சூட்டி புத்தாடையை அளித்தல்.

6) புனித தீர்த்தங்களைக் கொணர்தல்.





7) திருக்காப்புக் கட்டுதல்.

8) அஷ்ட மங்கலப் பொருட்களை ஏந்தி மணமக்களின் முன் செல்லல்.

9)மங்கள வாத்தியங்கள் முழங்க அழகாக அலங்கரிக்கப்பட்ட முத்துப்பந்தலின் கீழ் கைத்தலம் பற்றுதல் (பாணிக்கிரகணம்).

10) மந்திரங்களால் ஹோமம் வளர்த்து, தீ வலம் வருதல்.

11) அம்மி மிதித்தல்.

12) பொரி இட்டு (லாஜ) ஹோமம் செய்தல்.

13) வீதி வலம் வருதல்

14) மங்கள நீரால் மஞ்சனமாட்டுதல்

15) நிறைவாக இல்லறத்தின் பெருமைச் சொல்லி ஸத்ஸந்தான வ்ருத்தி பெற வாழ்த்துதல்

இதுவே முதன்மையானது. இறைவனின் பணிகளில் ஒன்று உலகத்தை ஆக்கலும் காத்தலும் ஆகும். அதற்கு திருமணம் ஒரு முக்கியமான ஒரு சடங்கு. இறைவன் செய்யும் உயிர் உற்பத்திக்கு திருமண உறவு ஒரு காரணம். கருவி (ஹேது). எனவே தான் நாச்சியார் திருமொழியின் வாரணமாயிரம் பாசுரத்தின் நிறைவு பாடலாக,

*“ஆயனுக்காக தான் கண்ட கனாவினை*
*வேயர் புகழ் வில்லிபுத்தூர்கோன் கோதை சொல்*
*தூய தமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்*
*வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே”*

என்று மக்கட்செல்வம் பெற வேண்டும் என்று வாழ்த்தி முடிகிறது. இனி திருமண வைபவங்கள் குறித்து ஆழ்வார்களும் ஆசார்யர்களும் காட்டிய வழியில் மேலும் பல விஷயங்களைச் சிந்திப்போம்.

**அருளிச்செயல் தொடரும்...**

# அம்மி மிதித்து அருந்ததி பார்த்து...




ஒரு சமயம் அருந்ததி தன் கணவர் வசிஷ்டரைப் பணிந்து "சுவாமி... கற்புடைய பெண்களுக்கு தம் கணவருக்குப் புரியும் சேவையிலும் மேம்பட்ட புண்ணியம் வேறு எதுவும் இல்லை.

ஆகவே தங்கள் அனுமதி பெறாது நான் செய்யும் எந்தக் காரியமும் எனக்கு நன்மை தராது. லட்சுமி தேவியோடு கூடிய நாராயணனை தியானித்துத் தவம் புரிய என் உள்ளம் விரும்புகிறது. தாங்கள் எனக்கு அனுமதி தர வேண்டும்" என்று வேண்டினாள்.

முனிவரும் அவள் விருப்பத்தை அறிந்து மகிழ்ச்சியுற்று "அன்பே அஞ்சனகிரி என்று பலரும் போற்றும் அத்திருமலையின் சிறப்புகளை பிரம்ம தேவன் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அங்குள்ள தும்புரு தீர்த்தம் மிகவும் பெருமை நிறைந்ததாகும். அங்கே சென்று நீராடி, பகவானை வழிபட்டு உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்துக் கொண்டு திரும்பு" என்று அவளை அனுப்பி வைத்தார்.

அருந்ததியும் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு அஞ்சன கிரியை அடைந்து, தும்புரு தீர்த்தத்தில் நீராடி, பாவ வினைகளைப் போக்கினாள். பின்னர் பகவானை உள்ளத்தில் தியானித்து பன்னிரண்டு ஆண்டுகள் அருந்தவம் புரிந்தாள்.

பகவானும் அவள் தவத்திற்கு மெச்சி, பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று லட்சுமியோடு, அருந்ததியின் அகக்கண்களுக்குக் காட்சி தந்தார். அருந்ததி அவரை வணங்கினாள். பகவானும், "நீ கோரும் வரம் என்ன?" எனக் கேட்டார்.

அருந்ததியும் "இறைவா மூவுலகத்திலுள்ள எவராயினும் இந்தத் தீர்த்தத்தில் நீராடி எழுந்தால் அவர்களது கொடிய பாவங்களைப் போக்கி அருள வேண்டும். இத்திருமலையின் சிறப்பைக் கூறுபவர்களும் அதனைக் கேட்பவர்களும் அவரவர் விரும்பும் பயனைப் பெற்று நலமோடு வாழ வேண்டும்" என்று வேண்டினாள்.

"உன் கோரிக்கையை அவ்வாறே ஏற்றுக் கொண்டு அவ்வாறே பக்த கோடிகளின் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். இன்னமும் ஒன்று. இத்தலத்தில் மிகவும் சிரத்தையோடு பன்னிரண்டு ஆண்டுகள் என்னைக் குறித்துத் தவமியற்றி, என் பேரருளுக்குப் பாத்திரமாகிறபடியால் கற்புடைய சிறந்த பெண்டிர்களுக்கு உன்னையே உதாரணமாகக் காட்டி, இவ்வுலகத்தோர் அனைவரும் கொண்டாடும் பேற்றையும் அருளினேன்" என்று சொல்லி பகவான் மறைந்தார். பெரும் களிப்போடு ஆசிரமம் திரும்பிய அருந்ததி தான் சென்று வந்த விவரங்களைக் கூறி மகிழ்வுடன் இருந்து வந்தாள்.



திரு. எம். இராதாகிருஷ்ணன்,
வாணியம்பாடி.
94428 11258

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## சித்திரகேதுவின் கதை



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

அசுரனாகிய விருத்ராசுரனுக்கு விஷ்ணு பக்தி ஏற்பட்டதற்கான முற்பிறப்பு வரலாற்றினை சுகமகரிஷி பரீட்சித்து மன்னனுக்கு விரிவாகக் கூறினார். அவ்வாறு எடுத்துக் கூறிய கதையே சித்திரகேதுவின் வரலாறாகும். இக்கதை ஸ்ரீமத் பாகவதத்தில் ஆறாம் ஸ்கந்தத்தில் வருகிறது. சூரசேனம் என்ற நாட்டை சித்திரகேது என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு கணக்கற்ற மனைவியர் இருந்தனர். இருப்பினும் அவர்களில் ஒருவருக்கும் குழந்தைபேறு உண்டாக வில்லை. எனவே பிள்ளைப்பேறு இல்லாத குறையை நினைத்து சித்திர கேதுவே மிகவும் கவலையுற்றிருந்தான்.

ஒரு சமயம் அங்கிரஸ் முனிவர் லோக சஞ்சாரம் செய்து வரும்போது சித்திரகேதுவின் அரண்மனைக்கு விஜயம் செய்தார். அப்போது அவன் அவரை மிகவும் பணிவோடும் பக்தியோடும் வரவேற்று, தக்க ஆசனம் தந்து, மரியாதை செய்தான். அவன் செய்த உபசரிப்பால் முனிவர் மிகவும் மனம் மகிழ்ந்தார். அப்பொழுது சித்திரகேதுவைப் பார்த்து முனிவர் இவ்வாறு வினவினார். “மன்னா! உன் உடலும், உள்ளமும், படைகளும், செல்வங்களும் நல்ல நிலையில் உள்ளனவா? உன் முகத்தைப் பார்க்கும் போது நீ ஏதோ தீராத கவலைக் கொண்டிருப்பதாக உணருகிறேன். உன் கவலைக்குக் காரணம் யாரோ? அல்லது எதுவோ? எனக்குக் கூறுவாயாக” என்றார். முனிவர் அவ்வாறு கேட்டவுடன், அரசனும் “முனிவரே! எனக்கு குழந்தைப் பேறு இல்லாத காரணத்தால் நானும், என் பெற்றோர்களும் நரகத்தில் விழவிருக்கின்றோம். எனவே அந்த நரகத்தில் விழாமல் எங்களை தாங்கள் தான் காப்பாற்ற வேண்டும்” என வேண்டிக் கொண்டான்.

சித்திர கேதுவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அங்கிரஸ் முனிவர் யாகம் ஒன்றை செய்தார். அந்த யாகத்தின் யக்ஞ சேஷத்தைப் பட்டத்து ராணியாகிய கிருததியுதிக்கு கொடுத்தார். அந்த யக்ஞ சேஷத்தின் பலனாக “உனக்கு மகிழ்ச்சியையும், துக்கத்தையும் கொடுக்கக்கூடிய புதல்வன் ஒருவன் பிறப்பான்” என்று கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றார். முனிவர் கூறியபடியே கிருததியுதி கர்ப்பம் அடைந்து, அழகான ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். தனக்கு மகன் பிறந்தான் என்ற செய்தி சித்திரகேதுவிற்கு, “தேன் வந்து பாய்ந்தது காதினிலே” என்றார் போல் இருந்தது. அளவற்ற மகிழ்ச்சி அடைந்த மன்னன் குழந்தைக்குப் பெரியோர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும்படி செய்ததோடு அவனுடைய ஜாதகப் பலனையும் கண்டறிந்தான். தரித்திரனுக்கு தனம் கிடைத்தால் அதன்மேல் மோகத்தை எப்படி நாளுக்கு நாள் வளர்த்துக் கொள்வானோ, அதுபோல இல்லாமல் இருந்து பிறந்த தன் குழந்தை மீதும் சித்திர கேதுவுக்கு அன்பும் பாசமும் வளர்ந்து வரத் தொடங்கியது. அவனுடைய மனைவிக்கும் குழந்தையின் மீது அன்பு அளவற்றிருந்தது. இது

மற்ற மனைவியருக்குப் பிடிக்கவில்லை. அவர்களுடைய உள்ளத்தில் பொறாமை உண்டானது. குழந்தை பிறந்த பின்பு மன்னன் அவர்கள் மீது காட்டிய அன்பு குறைந்ததை எண்ணி வருத்தம் அடைந்தனர். அதே நேரத்தில் கிருததியுதி மேல் மன்னன் காட்டி வரும் அளவற்ற பாசத்தைக் கண்டு அவள் மீதும் பொறாமையை வளர்த்துக் கொண்டார்கள். இந்தப் பொறாமைத் தீ மேலும் வளரத் தொடங்கியது. இதன் காரணமாக மனிதத் தன்மையை மறந்த அவர்கள் குழந்தைக்கு விஷம் கொடுத்து அதனைக் கொன்று விட்டனர்.

விஷத்தன்மையினால் இறந்து போன அக்குழந்தை, நீண்ட நேரத்திற்குப் பின்பும் எழுந்திருக்காமல் இருந்ததைக் கண்டு தன் தாதியை அழைத்துக் குழந்தையைத் தூக்கி வரும்படி கூறினாள். தாதி விரைந்து சென்று குழந்தையைத் தூக்கினாள். குழந்தை இறந்து கிடப்பதைக் கண்டு அலறிக் கூக்குரல் இட்டாள்.

அதைக் கேட்டுக் கிருததியுதி ஓடிச் சென்று குழந்தையைப் பார்த்தாள். குழந்தை இறந்து விட்டது என்று அறிந்தவுடன் அவள் அப்படியே வேரற்ற மரம் போல கீழே விழுந்தாள். இதற்குள் இச்செய்தி அரண்மனை முழுவதும் பரவியது. இதைக்கேட்டு அனைவரும் துக்கம் தாங்க முடியாமல் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுது புலம்பினார்கள். மற்ற அரசிகள் கூட கபடமாக நடித்து தங்கள் துக்கத்தைப் புலப்படுத்தினார்கள். மகன் இறந்த செய்தி சித்திரகேதுவுக்குத் தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. அவனால் அந்தச் சோகத்தைத் தாங்க முடியாமல் "ஓ" வென்று கதறி அழுதான்.

சித்திரகேது சோகத்தில் மூழ்கி நிலை கலங்கி போனதை அறிந்து நாரத மகரிஷியும், அங்கிரஸ் மகரிஷியும் மன்னனின் அரண்மனைக்கு வந்து ஆறுதலையும் அறிவுரையையும் கூறினர். அதன் பின்பு மன்னனும் சற்று மனம் தேறினான். ஓரளவு துன்பம் நீங்கப் பெற்றவனான சித்திரகேது அவர்களைப் பார்த்து மிகவும் பணிவோடு "சான்றோர்களே! நீங்கள் யார்? பெரியோர்களுக்கும் பெரியோர்களாய் இருக்கின்றீர்கள், எனவே எனக்கு ஞானத்தை உபதேசியுங்கள்" என்று வேண்டிக் கொண்டான்.

அதைக்கேட்டு அங்கிரஸ் முனிவர் "அரசே! என்னைத் தெரியவில்லையா? நீ புத்திரப்பேறு வேண்டி நின்றபோது உன் அரண்மனைக்கு வந்து உனக்குப் புத்திரப்பேறு உண்டாகும்படி அனுக்கிரகம் செய்தவன் நான்தான். என்னுடன் இருக்கும் இவர் பிரம்ம புத்திரராகிய நாரத மகரிஷி. புத்திர சோகத்தால் கவலையுற்று வருந்தி கிடக்கும் உன்னை, அத்துன்பத்திலிருந்து காக்கவே நாங்கள் வந்திருக்கின்றோம். சித்திரகேது! நீ ஆத்மாவைப் பற்றி நன்கு உணர்ந்து கொள். நீ யார் என்பதை அறிந்து கொள்ள முயற்சிப்பாயாக! உண்மையான ஆத்ம சொரூபத்தை அறிந்து கொண்டாயானால் அசாந்தி நீங்கி சாந்தி நிலவும்'' என்று கூறினார். அப்பொழுது நாரத முனிவர் கருணை உள்ளத்தோடு சித்திர கேதுவிற்கு மந்திர தீக்ஷை தந்து, அந்த மந்திரத்தை ஏழு நாட்கள் தொடர்ந்து ஜபித்து வந்தால், இறைவனின் அருள் கிட்டும் எனக் கூறி ஆறுதல் படுத்தினார்.

அதன் பிறகு நாரத முனிவர் தன் யோக பலத்தால் இறந்து போன குழந்தையின் ஜீவனை மீண்டும் வரும்படி செய்தார். அந்த ஜீவனுடன் பேசத் தொடங்கினார். இறந்த குழந்தை மீண்டும் பேசுவதைக் கண்டு அங்கு அழுதுப் புலம்பிக் கொண்டிருந்த உறவினர்கள் அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள். அவ்வாறாக மீண்டும் வந்த அந்த ஜீவன், ஞான உபதேசங்கள் சிலவற்றை எடுத்துக்கூறி தெளிவடைய செய்த பின்பு அங்கிருந்து சென்று விட்டது. அதைக்கேட்ட அரசரும், அரசியும் மற்றும் உள்ள உறவினர்கள் யாவரும் மெய்மறந்து நின்றனர். சிந்தை தெளிந்தார்கள். அது வரையில் இருந்த குழப்பம் நீங்கினார்கள். துக்கம் அவர்களை விட்டு

78

## சாஸ்த்திர நீதிகள்



துஷ்ட பார்யா சடம் மித்ரம்
ப்ருத்யோகம் கார சம்யுத: |
ஸ சர்பேச க்ரஹே வாஸோ
மிருத்யு ரேவ ந சம்சய: ||

மனைவி துஷ்ட குணமுடையவள் என்றால் அவளுடன் வாழ்க்கை நடத்துவது கஷ்டமே! கெட்ட புத்தியை உடைய நண்பர்களுடன் பழகி முன்னுக்கு வருவதும் கஷ்டமே! நமது வேலைக்காரன் அகங்காரம் உடையவனாக அமைந்து விட்டால் அவனிடம் பழகி வேலைகள் வாங்குவதும் கஷ்டமே!

நல்ல பாம்பு வாழ்ந்து வரும் வீட்டில் வசித்து வரும் கிருஹஸ்தன் நிம்மதியாக குழந்தைகளுடன் வாழ முடியாதாம் அதுவும் கஷ்டமே! இப்படிப்பட்டவர்கள் எப்போதுமே நிம்மதியின்றி மரண அவஸ்தையாலே கஷ்டப்படுவார்கள்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

விலகியது. அப்பொழுது சித்திரகேதுவின் அருகில் வந்து நாரத முனி அரசனுக்கு திவ்யோபதேசம் செய்தார். மந்தி ரோபதேசம் செய்த பின்பு நாரத முனிவரும், அங்கிரஸ் மகரிஷியும் இருவரும் பிரம்மலோகத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சித்திரகேது உணவு ஏதும் உட்கொள்ளாமல் தண் ணீர் மட்டுமே பருகி தனக்கு உபதேசித்த மந்திரத்தை தொடர்ந்து ஏழு நாட்கள் ஜபித்து வந்தான். இவ்வாறு சித்திரகேது பக்திச் சிரத்தையுடன் மந்திரத்தை உச்சரித்து வந்தமையால் அவன் வித்தியாதர உலகத்திற்குள் செல்லும் வாய்ப்பினைப் பெற்றான். பகவானுடைய தரிசனம் கிடைத்தது. அதைக் கண்டு மெய்சிலிர்த்த சித்திர கேது இறைவனை மனதாரப் புகழ்ந்து போற்றினான்.

அதன் பிறகு பகவான் எந்த திக்கில் இருந்து மறைந்தாரோ அத்திசை நோக்கி வணங்கினான். அவன் வித்தியாதர உலகிற்கு அதிபதியாகி மனமகிழ்ச்சியோடு அழகிய விமானத்தில் ஏறி பல இடங்களுக்குச் சென்றான். அப்படியாக விமானத்தில் ஏறி பயணித்துக் கொண்டி ருந்த போது பார்வதி தேவியையும் பரமசிவனையும் பார்த்தான். பரமசிவனின் மடியில் பார்வதி அமர்ந்திருந் தாள். பரமசிவன் அவளை அணைத்தபடி இருந்தார்.

இதனைக் கண்ட சித்திரகேது ஏளனமாய் பேசிய தோடு சிரிக்கவும் செய்தான். மேலும் இச்செயல் கண்டிக் கத்தக்கது என்றும் அங்கு கூடியிருந்த எல்லோர் முன் பாகவும் உரக்கக் கூறினான். பரமசிவன் இவனுடைய வார்த்தைகளைக் கேட்டும் ஒன்றும் பேசாமல் மௌன மாக இருந்தார். ஆனால் பார்வதி தேவி அவன் மீது கோபம் கொண்டு “பரமசிவனை அவமதித்த நீ இனி அசுர னாகப் பிறப்பாய்” என மிகவும் கடுமையான சாபமிட்டு விட்டாள்.

பார்வதி தேவியின் சாபத்தின் காரணமாகவே துவஷ்டாவினால் செய்யப்பட்ட வேள்வியில் ஓம – குண்டத்தில் விருத்ராசுரனாக வந்து தோன்றினான். பின்பு அவனே இந்திரனால் கொல்லப்பட்டு மகாவிஷ்ணுவிடம் கொண்ட பக்தியின் காரணமாக அவருடைய திருப்பாதங் களை அடைந்தான். சித்திரகேது சிறந்த பக்தன். அவனு டைய கதையைப் பக்தியோடு கேட்பவர்களுக்கு இந்தப் பிறவித் தளைகளிலிருந்து எளிமையாக விமுக்தி கிடைக் கும். மேலும், விடியற்காலையில் தூங்கி எழுந்து ஒரு மனதோடு ஸ்ரீஹரியை நினைத்து அவர் நாமத்தை உச்சரித் தவாறு இக்கதையைக் கேட்போரும் படிப்போரும் வாழ்க்கையில் எந்தவொரு துன்பமுமின்றி வைகுண்டம் சென்றடைவர்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

# இராம நாமங்கள்

**சீதையை மணந்ததால் சீதாராமன், கல்யாணராமன்**
**கோதண்டம் என்ற வில்லை உடையதால் கோதண்ட ராமன்**
**அயோத்தியை ஆண்டதால் அயோத்தி ராஜாராமன்**
**அழகன் என்பதால் சுந்தரராமன்**
**கோசலை மகன் என்பதால் கோசலராமன்**
**இராவணனை வென்றதால் ஜெயராமன்**
**சூரிய வம்சம் என்பதால் ரகுராமன்**
**ஆனந்தமானவன் என்பதால் அனந்தராமன்**
**சேதுவை கட்டியதால் சேதுராமன்**
**தசரத புத்திரனானதால் தசரதராமன்**
**இது தவிர இராமனுக்கு ஸ்ரீராமன், வெங்கட்ராமன்,**
**ஜானகி ராமன் என்ற பெயர்களும் உண்டு.**



**தொகுப்பு : திருமதி இ. சாந்தலட்சுமி, விருகம்பாக்கம்.**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**திருமங்கையாழ்வார் வாழித்திருநாமம் உரை தொடர்ச்சி...**

மணவாள மாமுனிகள் திருவாலி திருநகரியில் திருமங்கையாழ்வாரைத் திருவடி தொழச் சென்றபோது திருமங்கையாழ்வார் அர்ச்சாவிக்ரஹமாய், எம்பெருமானிடமிருந்து திருமந்த்ர லாபத்துக்கு நின்ற நிலையிலே இருந்த அர்ச்சா மூர்த்தியில் ஈடுபட்டு அருளிய வாழித் திருநாமம்.

*''ஐயன் அருள்மாரி செய்ய அடிஇணைகள் வாழியே*
*அந்துகிலும் சீராவும் அணையுமரை வாழியே*
*மையிலகு வேலணைத்த வண்மை மிக வாழியே*
*மாறாமல் அஞ்சலி செய் மலர்க்கரங்கள் வாழியே*
*செய்யகலனுடன் அலங்கல் சேர்மார்பும் வாழியே*
*திண்புயமும் பணிலமர்ந்த திருக்கழுத்தும் வாழியே*
*மையல் செய்யுமுக முறுவல் மலர்க்கண்கள் வாழியே*
*மன்னு முடித்தொப்பாரம் வளையமுடன் வாழியே''*

பதவுரை – ஐயன் – உயர்ந்தவராய், அருள்மாரி – நன்மையுடையோர்க்கு அருள் பொழியும் மேகம் போன்றவராய் உள்ள ஆழ்வாருடைய, செய்ய – சிவந்த, அடி இணைகள் – இரு திருவடிகள், – வாழியே. அந்துகிலும் – அழகிய நல்லாடையும், சீராவும் – கவசமும், அணையும் அரை – பொருந்தியிருக்கும் இடையும், வாழியே. மை– கறுத்து, இலகு – விளங்குகிற, வேலணைத்த – வேலைப் பிடித்த, வண்மை மிக – புகழ் மிகும்படியாக, வாழியே. மாறாமல் – பின்வாங்காமல், அஞ்சலி செய் – கைகூப்பு தலைச் செய்யும், மலர்க்கரங்கள் – மலர்தலையுடைய கைகள், –வாழியே. செய்ய – சிவந்த, கலனுடன் – ஆபரணங்களுடன், அலங்கல் – சேர், ஒளி சேர்ந்த மார்பும் – திருமார்பும், – வாழியே, திண்புயமும் – வலிமைமிக்க தோள்களும், பணிலமர்ந்த திருக்கழுத்தும் – சங்கு பொருந்திய திருக்கழுத்தும், – வாழியே. மையல் – அன்பு மயக்கம் கொண்ட, செய்ய முகமும் – சிவந்த முகமும், முறுவல் – சிரிப்பும், மலர்க்கண்கள் – மலர்தலையுடைய கண்களும், – வாழியே. மன்னு – பொருந்திய, முடி – திருமுடியைச் சுற்றிய, தொப்பாரம் – தொப்பாரமும், வளையமுடன் – அதன் மேல் புஷ்பத்தால் ஆன வளைய முடனிருக்கும் ஆழ்வார், – வாழியே. – பல்லாண்டு வாழ வேண்டும்.

(சிறப்புரை) (ஐயன் அருள்மாரி செய்ய அடி இணைகள்) – ஆழ்வார் தலைவி, தோழி, தாய் ஆகிய தன்மைகளில் பாடிய பாசுர உரைகளில் பெரியவாச்சான் பிள்ளை மிகவும் அழகாக பரகால நாயகியான ஆழ்வாரின் அவயவ அழகை அநுபவித்துள்ளார். அவைகளில் சில இடங்கள் இங்கு அளிக்கப்படுகின்றன. பரகால



நாயகியினுடைய திருவடியைப் பற்றிச் சொல்லும் போது "பஞ்சிய மெல்லடி" என்பதுபோல, படுக்கையில் இருந்தாலும் பயப்பட வேண்டும்படி மென்மையான காலை உடையவள் என்பர். *''பாடகம் சேர் மெல்லடியாள்''* – என்பதற்கு பாடகம் என்னும் பாத ஆபரணமானது பொருந்தியிருக்கிற மென்மையான ஸ்ரீபாதங்களை உடைய பெண் என்று உரைப்பர். இத்தகைய திருவடிக ளால் நடக்கும்போது *''பெடை அன்னமென நடை''* என் கிறபடியே– அன்னப்பேடை போன்ற நடை அழகுடை யவள் என்கிறார்.

(அணையும் அரை) அரை – இடை. *''மின்னையும் வஞ்சியையும் வென்றிலங்கும் இடை''* என்கிறபடியே மின்னையும் வஞ்சிக்கொம்பையும் தோற்பிக்கும் இடை யையுடையவள் என்றபடி. *''வள்ளிநுண் மருங்குல்''* வள்ளிக்கொடி போல நுண்ணியதாயிருந்துள்ள இடையை உடையவள். *''கொடி இடை''* – கொடிபோலே இருந்துள்ள இடை. *''மின்குலாம் மருங்குல்''* – மின்னைக் கொண்டாடுகிற இடை.

(மையிலகு வேலணைத்த வண்மை) *''மையிலகு வேல்''* – கறுத்து விளங்குகிற வேல். *''கறையுலா வேல்''* என்று தாமே அருளியதற்கு ஏற்ப எதிரிகள் ரத்தங்க ளாலே கன்றி நெய்யிட்டிருக்கையே தன்மையாகவுடைய வேல் என்பர் பெரியவாச்சான் பிள்ளை. எதிரிகளை அழித்தலால் உண்டான கறை கழற்றவும் சமயமில்லாத *''சுடரொளி நெடுவேல்''* என்பர். மேலும், போர் புரிவதே ஸ்வபாவமாக உடைய வேலைக் கையில் உடையவர். *''கன்றி நெடுவேல்'' ''மஹத்தநு:''* என்று ராமர் வில்லைச் சொல்லுமாபோலே ஒருவரால் நியமித்து ஆளமுடியாத படி நெடிதாய் இருந்துள்ள வேல். *''காமக்கதிர்வேல் வல்லான்''* என்பதற்குச் சேர மிக்க புகரை உடைய வேலைக்கையில் உடையவர் என்பர். *''மருவார் ஊனார் வேற்கலியன்''* என்கிறபடியே திருமங்கை ஆழ்வார் கையில் வேலுக்கு இரை பகைவர்கள் சரீரமாய்த்து. சத்ரு சரீரங்களிலே குளித்த வேலையுடையவர் என்று ஈடுபட்டு உரைப்பர் பிள்ளை. *''நஞ்சுலாவிய வேல்''* என்று திருஷ்டி விஷம்போலே இருக்கிற வேல். *''கையிலங்கு வேல்''* என்பதற்குச் சேர, – பட்டர் என்னும் ஆசார்யர், ஸர்வேச் வரன் திருமங்கை ஆழ்வாருக்குப் பக்கக் குதிரை ஏறிப் போமாகாதே. அவன் கையில் திருவாழி அழகுக்குக் காரணமாக அலங்கரிக்குமித்தனை. இவர் கையில் வேல் பகைவர்களை அழித்தலே கறை கழுவ அவசரமின்றிக்கே இருக்குமாயிற்று. அவன் தலைவனாம் தன்மையைக் குறிப்பதான திருவாழி இவர் அடிமைத் தன்மைக்கு திருவேலை பிடித்தபடி என்பர். *''சுடர்மான வேல்''* என்று எம்பெருமானார் அருளியபடியே ஒளிமயமான பெரிய வேல். திருமங்கைமன்னன் எடுக்கும்படியான வேல் என்பர் பிள்ளைலோகம் சீயர்.

(திண்புயமும் பணிலமர்ந்த திருக்கழுத்தும்) – தோளைப்பற்றிச் சொல்லும்போது *''பணைத் தோளி''* என்று சுற்றுடைமை பசுமை, ஒழுகு நீட்சி இவை எல்லா வற்றாலும் மூங்கில் போல் இருந்துள்ள தோளையுடைய வள் என்பர். *''கல்லின் மலி தோள்''* என்று விநயம் முதலானவற்றுக்கு இடம் இல்லாத பொறுத்துக் கொள் ளும் தோள். *''கல்நவிலும் திண்தோள்''* என்ற இடத்தில் வ்யஸநங்களெல்லாம் ஆடல் கொடுக்க வல்ல தோள் மிடுக்கு என்பர். *''காரார் புயற்கை''* – மேகம் போலே பூர்ணமாக கொடுக்கும் கை. *''கன்னீரமால்வரை தோள்''* –கல் என்று த்வனிக்குப்பேர். மிக்க ஒலிகளையுடைய அருவிகளை உடைய பெரிய மலை போன்ற தோள் மிடுக்கை உடையவர். *''வம்பவிழ் தார்க்கன்னவிலும் தோளான்''* என்று செவ்வி மாலையையும் அதுக்கு இருப் பிடமாய் கல்(மலை) என்று சொல்லப்படும் திண்ணிய தோளையுடையவர். *''தடம்தோளீ''* எம்பெருமானுடைய எல்லா அவயவ அழகும் இவளுடைய தோள் அழகு ஒன்றுக்கும் பொருந்தும் என்பர். *''இலங்கு எழில் தோளீ''* என்பதற்குச் சேர உஜ்ஜவலமாக இருப்பதாய், இடை, கண் ஆகியவற்றுக்கெல்லாம் மேலே அழகியதான தோள்களை உடையவள் என்பர். *''பணிலமர்ந்த திருக் கழுத்தும்''*- "பணிலம்" – சங்கு. சங்கு பொருந்திய திருக் கழுத்து என்றபடி. (மையல் செய்யுமுக முறுவல் மலர்க் கண்கள்) மையல் செய்யுமுக முறுவல் – பரகால நாயகி எம்பெருமானை தன் நினைவில் கொண்டு அவனைத் தொட்டதால் வந்த சந்தோஷத்தாலும், எதிர்த்தலையைத் தோற்பித்ததால் வந்த சந்தோஷத்தாலும் முறுவல் பண்ணினபடி என்று அநுபவிப்பர். அதாவது முகத்தில் பல் வரிசை கொஞ்சமே பிரகாசிக்கும்படி சிரித்து, அந்த சந்தோஷம் முறுவலோடு போகாத அளவில்லாத படி யாலே இளநிலா பாய்ந்தாற்போலே இருக்கும் படியாக வாய்விட்டு சிரித்தபடி இருந்தது என்பர் பெரியவாச்சான் பிள்ளை. *''களங்கனி முறுவல்''* –களங்கனி போல் புன் சிரிப்பை உடையவள் என்றபடி. எதிர்த்தலையைத் தோற்

பித்தோமாக வேணும் என்று இருக்கிறவர்கள் அகவாய் இப்படி விலக்ஷணமாய் பக்குவமாய்த் தோற்றினது போலே ஆயிற்று முறுவல் இருப்பது என்பர். ***''துளம்படு முறுவல்''*** என்கிறபடியே வெண்மை தோற்றும் முறுவல். "துளம்" என்று மாதுளமாய் அத்தை பல்வரிசைக்கு ஒப்பாகச் சொல்லுவர்.

(மலர்க்கண்கள்) – மலர்தலையுடைய கண்கள். பரகாலநாயகியான போது ***''பனி நெடுங்கண்''*** என்கிற படியே எம்பெருமானோடு மனக்கண்ணாலே கலந்த நிலையில் கண்ணீர் குளிர்ச்சியாயிருக்குமாம். மற்ற அவயவங்களிற் காட்டில் கண்ணழகிலே ஈடுபடும்படி யாகவன்றோ கண்ணின் அழகு இருப்பது என்பர். ***''பொரு கயல்கண்''*** என்றும் உரைப்பர். அதாவது எப்போதும் பார்ப்பதற்கு கருவியான கண். அவனைப் பொருகிற கண். மீன் போலே மிளிரும் கண். எம்பெருமானோடு கலந்தபோது சந்தோஷத்தாலே அலமாக்கும் என்று பல படியாக உரைப்பர். ***''பொருகயல் கண்''*** – ஒன்றுக் கொன்று உபமானமாவ தொழிய வேறு உபமானமில்லாத கண்கள் என்பர். மற்றொரு பாசுரத்தில் தாய் நிலைமை யில் சொல்லும்போது ***''குவளையம் கண்ணி''*** என்பர்.

அதாவது அவயவ சோபையில் உண்டான ஏற்றம் இவ ளுக்கு. ***''குளம்படு குவளைக்கண்ணிணை''*** –என்கிற படியே ரத்னம் உண்டாகும் இடம்போலே குணாகரமான வஸ்துவை அநுபவிக்கிற கண்கள் என்பர். அபூர்வ தர்சனத்தாலே கண்ட பொருள்களை இவை என்ன சொல் என்று கண்ணாலே கேட்கும்படி இருக்கை. ***''காவியங் கண்ணி''*** –காவி போலே அழகிய கண்ணையுடையவள் பிராட்டியைக் காட்டிலும் ஏற்றம் இவளுக்கு என்பர். இரு வரையும் சேர அநுபவிக்கிற கண் அல்லவா. ***''வாள் நெடுங் கண்''*** –வாள் போலே தீக்ஷணமாய் பரப்பையுடைய கண் கள். மேலும் ஒரு பாசுரத்தில் ***''மானாய மென்னோக்கி வாள் நெடுங்கண்''*** என்கிறார். அதாவது இளமையாய் மென்மை யான நோக்கையுடையவள். எதிர்த்தலையிலே கண் ணீரை உண்டாக்க வல்ல கண். வேறொன்றால் தன்னேற் றம் சொல்லமுடியாத கண். கருநெய்தல் போன்ற கண்ணை உடையவள். ***''நெடுமழைக்கண்ணி''*** – ஒரு தடவை கண்ணாலே பார்த்தாளாகில் ஒரு பாட்டம் மழை விழுந்தாற்போலே இலக்கானார் திமிர்க்கும்படியான நோக்கை உடையவள் என்றபடி.

(மன்னு முடித்தொப்பாராம் வளையமுடன்)– ***''மன்னு முடி''*** – பொருந்தியிருக்கிற கூந்தல். ***''காரார் குழலெடுத்துக்கட்டி''*** என்கிறபடியே கரிய நிறமுடைய கூந்தலை அலையமுடியாதபடி மேலே தூக்கி முடித் திருப்பவள். ***''மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்''*** என்கிறபடியே அழகிய வண்டுகள் பருகிய தேன் விக்கி ரீங்காரம் செய்யப் பெற்ற கூந்தலையுடையவள். ***''கோல மலர்க்குழல்''*** –கலம்பகம் அல்லது தனிப்பூச் சூட்டப் பொறாத குழல் என்பர். (தொப்பாரம் வளையமுடன்) ஆழ்வாருக்கு திருமுடியில் முன் எடுப்பாக தொப்பாரம் அணிவர். அதன் மேல் புஷ்பத்தாலான மாலையைத் தொப்பாரத்தை வளைத்து சாத்துவர்.

நித்யபடியே தங்கமுலாம் பூசிய தொப்பாரமும் அதனை வளைத்து புஷ்ப மாலையும் சாத்துவர். திருமங்கை மன்னன் மடிபிடி ரகசியத்தில் திருச்சேறை எம்பெருமானான மாமதலைப்பிரான் இவ்வாழ்வாரு டைய அசைந்த வளையத்திலே – அதாவது தலையில் சூடியிருக்கும் அசைந்தாடும் பூமாலையிலே புனுகுத் தைலத்தை முழுமையாகச் சொரிந்தாற்போலே, எம்பெரு மான் தன் திருவடிகளைக் கொண்டுவந்து வைக்கப் புகுந்தானாம். அப்போது, ஆழ்வார் தாம் இவனுக்குத் திருவடி போன்றவர்களான பரமபாகவதர்களையே கருதி இருப்பதாகச் சொல்லி, அவன் திருவடிகளை புறங்கை யாலே தட்டின வரலாறு இங்கு நினைதற்பாலதாகும். முதலியாண்டான் வார்த்தையாக 440 வார்த்தாமாலை யிலும் காணலாம்.

ஆக, ஆழ்வாரின் நாயிகா பாவத்திலும் தானான தன்மையிலும் திருமங்கையாழ்வாருடைய அவயவ, ஆபரண அழகு அளவிடற்கரியது என்பதால் ஆழ்வா ருக்கு "வாழியே" என்று பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

## வாசகர்களுக்கு அறிவிப்பு

**ப்ரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் ப்ரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும். நீங்கள் கீழ் குறிப்பிட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.**

பிரதான ஆசிரியர் அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543










# 108 திவ்விய தேசவைபவம்

# திருவைகுண்டம் [நவதிருப்பதி]

- திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

மஹாபிரளயம் ஏற்பட்ட சமயம். ஊழிக்காலப் பிரளயத்தில் சத்ய லோகம் வரை அழிந்தது. அப்போதும் பிரம்மா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். தன்னையோ, படைப்புத் தொழிலுக்கு உதவியான வேதங்களையோ காத்துக் கொள்ள இயலாத நீண்ட உறக்கத்தில் இருந்தார். இதை அறிந்த சோமுகாசுரன் என்கிற அசுரன் பிரம்மாவிடமிருந்து வேதங்களைத் திருடிச் சென்றான். உறக்கம் கலைந்து எழுந்த பிரம்மன், எங்கும் வெள்ளக்காடாக இருப்பதைப் பார்த்து, இது பிரளயம் என்று உணர்ந்து, வேதங்களைத் தேடினான். அவை திருடப்பட்டதை அறிந்த பிரம்மன் மறுபடியும் தவம் செய்து தான் வேதங்களைப் பகவானிடமிருந்து பெற முடியும் என்று எண்ணி, தனது கைப்பிரம்பை ஒரு பிரம்மச்சாரியாக மாற்றி, தவம் செய்ய ஏற்ற இடம் எதுவென்று அறிந்து சொல்லுமாறு அனுப்பினான். அந்த பிரம்மச்சாரி, தாமிரபரணிக்கரையில் இந்த இடத்துக்கு வந்தான். இங்கு ஒரு அழகிய பெண்ணைக் கண்டான். பிரம்மாவின் கட்டளையை மறந்தான். பிரம்மா பொறுத்துப் பார்த்தார். தன் கையில் இருந்த கமண்டலத்தை பெண்ணாக மாற்றி, தவத்துக்கு ஏற்ற பொருத்தமான இடத்தை ஆராயச் சொன்னார். அவள் தாமிரபரணி நதிக்கரையில் இந்த இடம் புனிதமான, பொருத்தமான இடம் என்று கூறவே, பிரம்மா இங்கு வந்து நீராடி தபஸ் செய்ததாகவும், பகவான் பிரசன்னராகி, சோமுகாசுரனிடமிருந்து வேதங்களை மீட்டுத் திரும்பவும் பிரம்மாவிடம் கொடுத்ததாகச் செய்தி.

பிரம்மா, பகவானைத் தரிசித்தார். பரவசப்பட்டார். வைகுந்த நாதனாக அர்ச்சையில் அங்கேயே எழுந்தருளப் பிரார்த்தித்தார். பகவான் அப்படியே ஆகட்டும் என்றார். இது திருவைகுந்தம் ஆயிற்று. பிரம்மா மகிழ்ச்சியுடன் திருமஞ்சனம் செய்தார். அது கலசதீர்த்தமாக ஆகியது.

காலதூஷகன் என்பவன் ஒரு கள்வன். திருடன். இந்த எம்பெருமானிடம் அசாத்ய பக்தி கொண்டவன். களவு செய்வதைத் தவறு என்று எண்ணாதவன். பொருள் ஈட்ட இதுவே வழி என்று இருந்தவன். ஒவ்வொரு முறையும் திருடச் செல்வதற்கு முன்பு, இந்த எம்பெருமானை வழிபட்டு தன்னை யாரிடமும் காட்டிக் கொடுக்காதே என வேண்டியவன். திருடிய பொருட்களில் பாதியை இந்த எம்பெருமானுக்கு அவ்வப்போது சமர்ப்பித்தான்.

ஒரு சமயம் இந்தக் காலதூஷகனின் ஆட்கள் அரண்மனைக்குத் திருடச் சென்றனர். சிலர் அரண்மனைக் காவலர்களிடம் கையும் களவுமாக மாட்டிக் கொண்டனர். காவலர்கள் விசாரித்த போது, தங்களுக்குத் தலைவன் காலதூஷகன் என்கிற கள்வன் என்று சொல்லவும், காலதூஷகன் எம்பெருமானைச் சரணடைந்தான். காப்பாற்றுமாறு வேண்டினான். எம்பெருமான் உடனே காலதூஷகனாக உருவெடுத்தார். தானே சென்று, அரண்மனை காவலர்களிடம் கட்டுப்பட்டுக் கொண்டார். காவலாளிகள் இவரை, மன்னன் முன்பு கொண்டு போய் நிறுத்தினார்கள். இந்த மன்னன், வைகுந்த நாதனிடம் பக்தி கொண்டவன். மன்னன் உற்றுப் பார்த்தான். எம்பெருமான், உளம் கவர்ந்த கள்வனாக அவனுக்குக் காட்சி தந்தான்.

உடனே அரசன் "வைகுந்த நாதா... இந்த பொருட்கள் எல்லாமே உன்னுடையது தானே... ஏன் கள்வனாக வந்து திருடுகிறாய்" என்று ஆதங்கப்பட்டான். பகவான் மன்னனிடம், உன் செல்வம் தரும வழியில் தர்மத்துக்கு என்று செலவிடப்படவில்லை. அதனால்தான் யாமே கள்வனாக வந்தோம் என்றார்.



மன்னனுக்கு பொருள் மீதான பற்று தெளிந்தது. காலதூஷகனுக்கு திருட்டுத் தொழில் கசந்தது. இருவரும் பகவானை வேண்டினார்கள். இன்று முதல் இந்த திவ்ய தேசத்தில் கள்ளர் பிரான் என்கிற திருநாமத்துடன் இங்கேயே இருந்து அருள்புரியுமாறு வேண்டினார்கள். வைகுந்தநாதன், இப்படிக் கள்ளர்பிரானாகவும் ஆனார் என்று நவதிருப்பதிமான்மியம் பேசுகிறது.



யுகப்பிரளயங்கள் நிகழ்ந்தன. திருவைகுண்டம் பூமியில் அமிழ்ந்தது. மறைந்தது. பாண்டிய மன்னனின் ஆட்சி, அவனது ஏவலர்கள், இந்த மேட்டில் (வைகுண்டவனம்) மாடு களை மேய்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஏகப்பட்ட பசுக்கள். அதில் ஒரு பசு தினந்தோறும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் பூமியின் பிலத்துவாரத்தில் (பொந்தில்) பாலைச் சொரிந்தது. செய்தி மன்னனுக்கு எட்டியது. மன்னன், ஆர்வத்துடன் அங்கு வந்து, மண்ணை அகழ்ந்து பார்த்தபோது ஸ்ரீவைகுண்ட திவ்ய தேசம், கள்ளர்பிரான் பூமிக்கு உள்ளே இருப்பதை அறிந்து பதைபதைத்தது. அந்தத் திருக்கோயிலைப் புதுப்பித்தார். கள்ளர்பிரான் மூலவருக்கு இப்போதும், தினந்தோறும் பால்திருமஞ்சனம் நடைபெறுகிறது.



**சிறப்புகள் :**

எம்பெருமான் தன் திருமேனியை உருவாக்கிய சிற்பி, பேரன்பினால் தன்னுடைய கன்னத்தைக் கிள்ளி அதனால் கன்னத்தில் ஏற்பட்ட வடுவுடன் (அடையாளம்) இப்போதும் காட்சி அளிப்பதாகச் சொல்வர். இங்கு, ஆதிசேஷன், தன் திருக்கரத்தால் எம்பெருமானுக்குத் திருக்குடை பிடிக்கும் அற்புதம், வேறு எந்த திவ்ய தேசத்திலும் சேவிக்க இயலாது. சித்திரை மாதம் ஆறாம் நாளும், ஐப்பசி மாதம் ஆறாம் நாளும் சூரியன் தன் கிரணங்களை இந்த எம்பெருமான் திருமேனி மீது படர விடுவது அற்புதக் காட்சி. நவதிருப்பதிகளில் இது சூரியனுக்கு உரிய தலம்.



| | |
|---|---|
| பெருமாள் | – வைகுந்த நாதன் கள்ளர்பிரான் (கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்) |
| தாயார் | – வைகுண்ட வல்லி, ஸ்ரீதேவி, கள்ளர்பிரான், நாச்சியார். |
| புஷ்கரணி | – பிருது தீர்த்தம், கலச தீர்த்தம். |
| விமானம் | – சந்திர விமானம். |
| தீர்த்தம் | – தாமிரவருணி. |
| ப்ரத்யக்ஷம் | – பிருது சக்ரவர்த்தி, இந்திரன், பிரம்மா, நம்மாழ்வார். |
| ஆகமம் | – பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | – நம்மாழ்வார். |
| விசேஷம் | – நவக்ரகங்களில் சூரியனால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இது பரிகார தலம். |



**த்யான சுலோகம்**

*ஸ்ரீவைகுண்ட புரே ஹரிர் விஹரதே வைகுண்ட வல்லயாந்வித:*
*தத்தோ யஸ்ஸுரநாயகஸ்ய வரத: ஸ்ரீதாம்ரபர்ணீதடே ।*
*தத்ரைவேந்து விமாந பூஷணமணிர் திவ்யைஸ் ஸதா ஸூரிபி:*
*ஸேவ்யஸ் வாங்க்ரி ஸரோரு ஹாச்ரித பவப்ரத்வம்ஸ நைகவ்ரத: ॥*



## ஜம்மலமடுகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 05-05-2020 | செவ்வாய் | ..... | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 06-05-2020 | புதன் | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 07-05-2020 | வியாழன் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 08-05-2020 | வெள்ளி | முத்துப்பந்தல் வாகனம் | சிம்ம வாகனம் |
| 09-05-2020 | சனி | கல்ப விருக்ஷ வாகனம் | அனுமத்வாகனம் |
| 10-05-2020 | ஞாயிறு | மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 11-05-2020 | திங்கள் | சர்வ பூபால வாகனம் | கல்யாணம், யானை வாகனம் |
| 12-05-2020 | செவ்வாய் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 13-05-2020 | புதன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 14-05-2020 | வியாழன் | சக்கர ஸ்நானம் | துவஜாவரோஹணம் |
| 15-05-2020 | வெள்ளி | ..... | புஷ்ப யாகம் |

### பாசுரம்

*புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை இருந்து,*
*வைகுந்தத்துள் நின்று,*
*தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே என்னை*
*ஆள்வாய்! எனக்கு அருளி*
*நளிர்ந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப, நாங்கள்*
*கூத்தாடி நின்று ஆர்ப்பப்*
*பளிங்குநீர் முகிலின் பவளம்போல் கனிவாய் சிவப்ப*
*நீ காணவாராயே*

– நம்மாழ்வார்

*தார் உடுத்துத் தூசுதலைக்கு அணியும்பேதை இவள்*
*நேர் உடுத்த சிந்தை நிலை அறியேன் - போர் உடுத்த*
*பாவை குந்தம் பண்டு ஒசித்தான் பச்சைத் துழாய் நாடும்*
*சீவைகுந்தம் பாடும் தெளிந்து.*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

421. *ஓம் பரிக்ரஹ நம:*
(பக்தர்களை ஏற்றுக் கொள்பவனே)
*ஓம் அநந்தரூபாயை நம:*
(பகவானையும் நிரூபிக்க இலக்கணமானவளே)

422. *ஓம் உக்ர: நம:*
(தர்ம விரோதிகளிடம் கடுமையாக இருப்பவனே)
*ஓம் அநந்தஸ்தாயை நம:*
(அத்தகைய அளவற்ற பகவானுடன், கூடவே எங்கும் இருப்பவளே)

423. *ஓம் ஸம்வத்ஸர: நம:*
(ஆயுதபாணியாய், காலத்தை எதிர்பார்ப்பவனே)
*ஓம் ஸர்வதாநந்த ஸங்கமாயை நம:*
(எப்போதும் பகவானுடன் சேர்ந்தே சிந்திக்கத் தக்கவளே)

424. *ஓம் தக்ஷ: நம:*
(மிலேச்சர்களை அழிப்பவனே)
*ஓம் யக்ஞா ஸந்யை நம:*
(எல்லா யாகங்களிலும் பகவானைப் போலவே ஹவிஸ்ஸை ஏற்பவளே)

- ஸ்வாமி பிரசாதத்தை வீணாக்காதீர்.
- புஷ்கரணியில் ஷாம்பு, சோப்பு உபயோகப் படுத்தாதீர்.
- பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தாதீர்.
- திறந்த வெளியில் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களை செய்யாதீர்.
- க்யூ வரிசையில் மற்றவரை முந்திக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் செல்லாதீர்.

425. *ஓம் விஸ்ராம: நம:*

(கஷ்டப்படுபவர்களுக்குப் புகலிடமே)

*ஓம் மஹா வ்ருஷ்ட்யை நம:*

(உயர்ந்த யாக பலன்களை அளவிலாது தருபவளே)

426. *ஓம் விஸ்வதக்ஷிண: நம:*

(அச்வமேத யாகத்தில் பூமியை அந்தணர்களுக்கு தக்ஷிணையாகக் கொடுத்தவனே)

*ஓம் ஸர்வபூஜ்யாயை நம:*

(பகவானைப் போல சர்வ கர்ம ஸமாராத்னியாக இருப்பவளே)

427. *ஓம் விஸ்தார: நம:*

(வேதமுறைகளை விரிவாக வெளிப்படுத்துபவனே)

*ஓம் வஷட்க்ரியாயை நம:*

(ஆச்ரிதஸுலபையாயும், அவர்களுக்கு பராதீனமாயும், வாத்ஸல்யத்தால் ஆகுபவளே)

428. *ஓம் ஸ்தாவரஸ்தாணு: நம:*

(தர்மத்தை நிலைநிறுத்துபவனே)

*ஓம் யோகப்ரியாயை நம:*

(பக்தி ப்ரபத்தியோகம் செய்பவர்களுக்கு அவற்றுக்கான பலனை அளிப்பவளே)

429. *ஓம் ப்ரமாண: நம:*

(நன்மை, தீமைகளுக்குப் ப்ரமாணமே)

*ஓம் வியந்நாப்யை நம:*

(ஆகாசம், திருநாபியாக தியானிக்கப்படுபவளே)

430. *ஓம் பீஜமவ்யய: நம:*

(அழியாத விதையாக இருப்பவனே)

*ஓம் அநந்த ஸ்ரியாயை நம:*

(எல்லையில்லாத கல்யாண குணங்களை உடைய பகவானை ஆச்ரயித்து இருப்பவளே)

*ஸ்ரீமதே பூ, வைகுந்தவல்லி நாயிகா சோரநாயகி ஸமேத ஸ்ரீவைகுண்டநாத (கள்ளர்பிரான்) ப்ரப்ரஹ்மணே நம:*

**இந்தத் திவ்யதேசம் – திருநெல்வேலி – திருச்செந்தூர் சாலையில் 25 கி.மீ., ரயில் நிலையம்–ஸ்ரீவைகுண்டம் (கோயில் 2.5 கி.மீ. தொலைவு) தாமிரவருணி ஆற்றில் வடக்குக்கரையில் அமைந்துள்ளது.**

திவ்ய தேச வைபவம் வளரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## அடையாளம் கண்டு கொள்க

கீழ்கண்ட வரிசைகளில் ஒவ்வொரு எழுத்தும் பக்கத்திலுள்ள எழுத்துக்களிலிருந்து மாறுபடும் அம்சங்களை ஊன்றிக் கவனித்து, சரியானபடி எழுதுவதற்குக் கற்க வேண்டும்.

अ आ उ ऊ ओ औ अं

ज ञ च

ट ठ ड ढ द

ड ङ इ ई ह झ

प प ण

व ब च

फ क ऋ

य थ

ग म भ न

घ ध छ

त ळ

र स ख श ए ऐ

– திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி, சென்னை, 99404 28830

மேலும் வளரும்...




# உனது இன்பதுன்பத்திற்கு நீயே காரணம்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489

இவ்வுலகில் சிலர் இன்பமுடன் இருப்பது போன்றும், சிலர் துன்பமுடன் இருப்பது போன்றும் காணப்படுவர். சிலர் வெற்றிப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தால், சிலரோ எப்பொழுதும் தோல் வினையே தழுவிக் கொண்டிருப்பது போல் காணப் படுவர். சிலர் 90 வயதிலும் மலையை ஏற, ஒரு சிலரோ 40 வயதிலேயே படுத்தப்படுக்கையாகின்றனர். ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது? இவற்றை எல்லாம் கண்டு சிலர் கடவுளை பழிக்கின்றனர். அல்லது பக்தியுடன் இருப்போரும் பக்தியை விடுத்து நாத்திகர்களாகின் றனர். அல்லது வேறு கடவுள்களை வணங்குகின்றனர். அல்லது புதிய புதிய விரதங்களை கடைபிடிக்கத் துவங்கி விடுகின்றனர். இவ்வாறாக மனிதனுக்கு வரக் கூடிய இன்ப துன்பத்திற்கு காரணம் யார்? இளை ஞர்களை சாதாரணமாக துன்புறுத்துவது படிப்பு, வேலை, எதிர்காலம் எங்ஙனம் அமையுமோ என்பன வையே ஆகும். இவை சிலருக்கு எளிமையாக, சிரமமின்றி கிடைத்தது போன்று காணப்படும். மேலும், சிலர் ஏதும் இல்லாதது போன்று உணருவர். வேலை, கல்வி இல்லாத இளைஞர்கள் எதிர்மறையான செயல் களில் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்களின் வாழ்க் கையே பாதிப்புக்குள்ளாகிறது. இது போன்ற சிக்கல் களுக்கு பகவத் கீதை கூறும் வழியினை காண்போம்.

“புவியினுடைய காரண காரியத்திற்கு இயற்கையே காரணம் மற்றும் உலகில் உள்ள பல இன்ப துன்பங் களுக்கு ஜீவனே காரணம்” என்று சொல்லப்படுகிறது (பகவத் கீதை 3:21). ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்னதாக கூறப்பட்ட பகவத் கீதையின் படி, ஒவ்வொரு வரும் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு அவர்களே காரணமேயன்றி வேறொருவர் காரணம் ஆகார். எப்பொழுது மானிடர்களும் இளைஞர்களும் தாமே தம் இன்பதுன்பத்திற்குக் காரணம் என உணருகிறார்களோ



அப்பொழுதே அவர்களின் வாழ்க்கையும் மாறும். அதுபோன்ற மாற்றத்தை பெறவே பகவத்கீதை விழைகிறது. தற்பொழுது பெறக்கூடிய இன்ப துன்பத்திற்கு முந்தைய பிறவியின் கா்ம பலனே காரணமாகும்.

நாங்கள் இதுவரை தெரிந்து எவ்வித தவறும் செய்யவில்லை. எவ்வித பாவமும் செய்யவில்லை. எதற்காக சிரமங்கள்! எதற்காக துன்பங்கள்? மேலும் நல்லவர்களுக்கே எதற்காக அதிகளவில் துன்பங்கள் ஏற்படுகின்றன? பாவங்களை செய்வோர் நன்றாகவே உள்ளனரே! என்று பலர் கூறுவர். கீதை ஞானம் அற்றவர்களே இது போன்று கூறுவர்.

“இருப்பினும், நாம் மகிழ்ச்சியுடன் இருத்தல் வேண்டும். துன்பத்திலிருந்து விடுபட முடியுமா? மேலும் எதனை செய்தவர்க்கு மானிடப் பிறப்பு கிடைத்தது. இதற்கு வழிகாட்டியாக அமைவதே பகவத் கீதை என்று பதில் கூறலாம். மனிதனின் தூய்மையற்ற இதயமே அவனின் துன்பத்திற்குக் காரணம். மனிதனின் தெய்வீக குணமே இன்பத்திற்குக் காரணம். இதயம் எப்பொழுதும் தெளிவுடனே இருத்தல் வேண்டும். இலட்சயம் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும். அப்போது தான் வாழ்க்கையும் இன்பமுடன் அமையும்.

இதயம் தெளிவற்று, இலட்சயமின்றி இருந்தால் வாழ்க்கையும் துன்பமாகவே அமையும். இதயம் அழுக்கற்றும், மேன்மையான இலட்சயத்துடன் இருத்தல் நம் செயலாலேயாகும். அது மற்றவருடைய கடமை அல்ல. இவ்விரண்டும் இருந்தாலே இன்பத்திற்கு பாதையை அமைத்தது போன்றதாகும்.

இதயத்தை தெளிவாக வைத்திருத்தல் என்றால் என்ன? இது மிகவும் முக்கியமான கேள்வி. பொறாமை, வெறுப்பு, கோபம் இன்றி இதயத்தை தெளிவாக வைத்திருத்தலாகும். துருவனுக்கு ஐந்து வயது இருக்கும்போது பெருத்த அவமானம் ஏற்பட்டது. உடனே உயர்ந்த இலட்சயத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

தந்தையின் மடியில் அமர அவனுக்கு தடை ஏற்பட்டது. எனவே அவன், தந்தையை விட, தாத்தாவை விட, முப்பாட்டனை விட மேன்மையான நிலையில் அமர முடிவு எடுத்தான். அவனிடம் இலட்சயம் ஏற்பட்டது. அவ்வளவு எளிதில் அவை நடைபெற்றும் விடாது. அப்பொழுது அவனின் தாய் சுனீதி “துருவா! உன்னை அவமதித்தவர்களுக்கு கெடுதல் ஏற்பட வேண்டும் என்று மட்டும் எண்ணாதே” என்று உபதேசித்தாள்.

அதாவது இதயத்தை தெளிவாக வைத்துக் கொள். வெறுப்பை அருகில் அண்டவிடாதே என்று கூறினாள். அப்பொழுது துருவன் தன்னை அவமதித்தவர்களின் மீது வெறுப்பும் கோபமும் கொள்ளாமல் உயர்வான இலட்சயத்துடன் காட்டிற்குச் சென்று, தவம் புரிந்து, எம்பெருமானின் தரிசனத்தால் தன் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டான். இது தான் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் வெற்றியின் இரகசியமுமாகும்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 44க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | ஷ் | ணு | த | னு | சு | 2 கு | க | ன் | | 3 ச | கி |
| ரா | த் | ம | 4 சு | க் | ரீ | வ | ன் | த | ர | 5 ப | மீ |
| த | | | ம | 6 அ | யோ | த் | தி | ர | 7 அ | ரி | ல் |
| ன் | ம | 8 ரா | ந் | | | | ரு | ச | க | லி | 9 வா |
| ண | | | தி | ன் | ச | ரீ | 10 மா | 11 த | லி | தி | 12 மை |
| வ | த் | ஜி | ர | தி | ந் | 13 இ | ல | ங் | 14 கை | கே | யி |
| 15 ரா | க | வ | ன் | ண | ஷ | பீ | 16 வி | ன் | ட | ரு | 17 க |
| ர் | ய | 18 தி | ஸ் | க | 19 அ | க்ஷ | ன் | | 20 தா | ர் | 21 வை |
| | | ரி | த | டோ | ண் | 22 ம | ந் | த | ரை | ட | தே |
| யு | பா | 23 ஜ | ன | க | ர் | | தை | ந் | கி | ஷ் | 24 கி |
| ர | | டை | | | | வி | 25 சீ | ஞ் | ர | 26 சி | ன |
| 27 ச | த் | ரு | க | ண | ன் | ண | ம | க்ஷ் | 28 ல | 29 வ | 30 ஜா |



ஓம் த்ரிவிக்ரமாய நம:

தொடர்

ஆயுர்வேதம்

# எலுமிச்சை



ஆண்டு முழுவதும் கிடைக்கப்பெறும் எலுமிச்சைப் பழத்தை உணவு தயாரிப்பில் மட்டுமின்றி மருத்துவம் மற்றும் அழகு பொருட்கள் தயாரிப்பிற்கும் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றோம். எலுமிச்சைப் பழத்தை சமஸ்கிருதத்தில் ஜம்ஜீர, நிம்பு, நிம்புகா என்றும், ஆங்கிலத்தில் லெமன் என்றும் அழைக்கப்படுகின்றது. ரூடேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இதன் தாவரவியல் பெயர் “சிட்ரஸ் ஏசிட” என்பதாகும். கடவுளுக்கு படைக்கக்கூடிய இந்த எலுமிச்சையின் மருத்துவ குணங்களைப் பார்ப்போம்.

### முகத்தில் ஏற்படும் கரு மச்சங்கள் குறைய :

நாள்தோறும் ஒருமுறை, போதுமான அளவு எலுமிச்சை இரசத்தில் காய்ச்சிய பாலைக் கலந்து, முகத்தில் தடவி, சிறிது நேரத்திற்குப் பின் வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் கரு மச்சங்கள் குறைந்து முகம் பளபளப்பாகும்.

### நன்கு பசி எடுக்க :

நாள்தோறும் ஒரு வேளை, உணவு உட்கொள்வதற்கு அரை மணி நேரம் முன்பாக 100 மி.லி. நீரில் அரை டீஸ்பூன் வெல்லம் பொடியை கலந்து, அதனுடன் அறை மூடி எலுமிச்சை இரசத்தை சேர்க்க வேண்டும். மேலும் ஒரு கிராம் சீரகம் பொடி, ஒரு கிராம் உப்பு ஆகியவற்றையும் நன்கு கலந்து குடித்து வந்தால் பசி நன்றாக எடுக்கும்.

### உடல் அரிப்பிற்கு :

நாள்தோறும் ஒருமுறை தேவையான எலுமிச்சை இரசத்துடன் தேங்காய் எண்ணெய் கலந்து உடலில் பூசி வந்தால் உடல் அரிப்பு குறையும்.

### முடி உதிராமல் இருப்பதற்கு :

100 மி.லி. எலுமிச்சை ரசத்தை அரை லிட்டர் தேங்காய் எண்ணெய் உடன் கலந்து, நன்கு சூடுபடுத்தி இறக்கி வடிகட்டி சீசாவில் வைத்துக் கொண்டு, நாள்தோறும் தலைமுடிக்கு பூசி வந்தால் முடி உதிராமல் இருக்கும். பொடுகுத் தொல்லையும் குறையும். முடி பார்ப்பதற்கு அழகாகக் காட்சியளிக்கும்.

### உடல் எடை குறைய :

மிளகு பொடி, கொத்தமல்லி பொடி, சீரகப்பொடி ஆகிய ஒவ்வொன்றையும் 40 கிராம் வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் ஆயுர் வேதக் கடையில் கிடைக்கப்பெறும் சைந்தலவணப் பொடியை 10 கிராம் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நாள்தோறும் இருமுறை வேளைக்கு 200 மி.லி. வெதுவெதுப்பான நீரில் 2 அல்லது 3 கிராம் பொடியை கலந்து அதனுடன் 10 மி.லி. எலுமிச்சை ரசத்தையும் சேர்த்து குடித்து, முறையான உடற்பயிற்சி, சிறந்த உணவு முறைகளை உட்கொள்ளும் பழக்கத்தைக் கையாள



தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா.
90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா, 99850 03156

வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடல் நல்ல ஆரோக்கியமாக இருக்கும்.

**தடிப்புகள் குறைய :**

நாள்தோறும் மூன்று வேளை, 100 மி.லி. நீரில் 2–3 கிராம் படிக வெல்லம் பொடி மற்றும் 5 மி.லி. எலுமிச்சை ரசத்தைக் கலந்து குடித்தால் உடலில் தடிப்புகள் குறையும்.

**விக்கல் நிற்க :**

நாள்தோறும் காலை, மாலை இருவேளைகளில் 10 மி.லி. எலுமிச்சை இரசத்தில் 10 மி.லி. தேன் கலந்து உட்கொண்டால் விக்கல் நிற்கும்.

**சிறுநீரகத்தில் கற்கள் கரைய :**

நாள்தோறும் காலை, மாலை வேளை 200 மி.லி. நீரில் ஒரு கிராம் சைந்தலவணப்பொடி, 5–10 மி.லி. எலுமிச்சை ரசம் கலந்து குடித்தால் சிறுநீரகத்தில் உள்ள கற்கள் கரையும்.

**பல் ஈறுகளின் வலியைப் போக்க :**

தேவையான அளவு லவங்கப்பொடியுடன், தேவையானளவு எலுமிச்சை இரசத்தைக் கலந்து பல் ஈறுகளின் மேல் தடவி விட்டால் வலி குறையும்.

**முகப்பரு நீங்க :**

எலுமிச்சை இரசம், தயிர், தேன் சமமானளவில் கலந்து முகத்தில் பூசி ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவிக் கொண்டாலோ அல்லது எலுமிச்சைத் தோலை நன்கு உலர்த்தி பொடி செய்து கொண்டு, தேவையானளவு காய்ச்சிய பாலுடன் கலந்து முகத்தில் நன்கு பூசி, சிறிது நேரத்திற்குப் பிறகு முகத்தைக் கழுவிக் கொண்டாலோ முகம் பொலிவுடன் இருக்கும்.

**சொறி, சிரங்கு போன்ற தோல் வியாதிகள் குறைய :**

காய்ந்த எலுமிச்சைப் பழ தோல்களை நன்கு சுட்டு சாம்பல் செய்து ஜல்லித்து வைத்துக் கொண்டு, அதனை தேங்காய் எண்ணெய் உடன் கலந்து பூசிக் கொண்டால் தோல் வியாதிகள் குறையும்.

**தேள்கடிக்கு :**

தேவையான அளவு எலுமிச்சைப் பழ இரசத்துடன் சிறிதளவு உப்பு போட்டு மிருதுவாக அரைத்து தேள் கடித்த இடத்தில் தடவினால் தேள் கடியினால் ஏற்படும் வலி, கருமை, எரிச்சல் ஆகியவை நீங்கும்.

**வாய் துற்நாற்றம் நீங்க :**

10 மி.லி. எலுமிச்சை இரசத்தை 50 மி.லி. பன்னீரில் கலந்து, நாள்தோறும் 1,2 முறை வாய் கொப்பளித்தால் வாய் துற்நாற்றம் நீங்கும்.

**பற்கள் பளபளப்பாக இருக்க :**

எலுமிச்சம் பழத்தோலை காய வைத்து நன்கு பொடி செய்து கொண்டு, அதனுடன் சம அளவு உப்பு சேர்த்து, பற்பொடியாக உபயோகித்தால் பற்கள் மிகவும் பளபளப்பாக ஜொலிக்கும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக் கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. தத்தாத்ரேயர்
2. சதுர்முக பிரம்மன்
3. பூதனி.
4. சந்திரன்.
5. வாஜபேய யாகம்.
6. பார்வதி தேவி (தக்ஷனின் மகள்).
7. வீரபத்ரன்.
8. வீரபத்ரன்.
9. அக்னித்ரா, ப்ரிய வ்ரதன்.
10. புத்ர காமேஷ்ட்டி யாகம்.

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி



# 2020
# ஏப்ரல் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

<table>
<tr><td>சூரியன்</td><td>யுரேனஸ்</td><td>சுக்ரன்</td><td>ராகு<br>சந்திரன்</td></tr>
<tr><td>புதன்<br>நெப்ட்யூன்</td><td colspan="2" rowspan="2">ஏப்ரல் - 2020<br>09 - புதன் - மீனம்<br>13 - சூரியன் - மேஷம்<br>25 - புதன் - மேஷம்</td><td></td></tr>
<tr><td>செவ்வாய்<br>ப்ளூட்டோ<br>குரு சனி</td><td></td></tr>
<tr><td>கேது</td><td></td><td></td><td></td></tr>
</table>

**மேஷம்** ராசி நாயகன் செவ்வாய் ஒன்பது, பத்திற்குரிய குரு மற்றும் சனியுடன் மகரத்தில் உலவிடுவது சிறந்த ராஜ யோகமாகும். தொழில், வியாபாரம் மற்றும் உத்தியோகத்தில் மிகுந்த உன்னதமான நிலையை அடைவீர்கள். தனஸ்தானம் வலிமைப் பெற்றுள்ளதால் பெரும் பொருள் வரவு வந்து சேரும்.

**ரிஷபம்** சுக்ரனும், புதனும் சாதகமாகச் சஞ்சரிப்பதால் மாணவர்கள் கல்வியில் சிறந்த முறையில் விளங்குவர். பணநடமாட்டம் அதிகமாகும். எதிர்ப்பாராத பொருள் வரவும் உண்டு. அயல் நாட்டுத் தொடர்புடன் தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை நீடிக்கும்.

**மிதுனம்** ராசி நாதன் புதன் லாபஸ்தானத்தில் உலவிட மாதம் தொடங்கியுள்ளது. சூரியனின் பத்தாம்மிடத்துச் சஞ்சாரத்தால் அரசு வழியில் எதிர்ப்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள். பண வரவு பெருகும். அந்தஸ்து, மதிப்பு உயரும். உடல் நலம் சீராகும். கலைஞர்கள், எழுத்தாளர்கள் வளர்ச்சி காண்பார்கள்.

**கடகம்** மாத ஆரம்பத்தில் ராசி நாயகன் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பினும், யோகக்காரகர்களான செவ்வாயும், குருவும் ஏழிலமர்ந்து ராசியை நோக்குவதால் இம்மாதத்தில் மிக நல்ல பலன்கள் ஏற்பட உள்ளன. திருமணம் கூடி வரும். வேலைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு எதிர்ப்பார்த்த நல்ல வேலை கிடைக்கும்.

**சிம்மம்** 11க்குரிய புதன் ஏழிலும், ஆறுக்குடைய சனி 6ம் வீட்டிலும் உலவுவது சிறப்பாகும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். செல்வவளம் அதிகரிக்கும். புதியவர்களது அறிமுகம் கிட்டும். அதனால் அனுகூலமும் உண்டாகும். ஐந்தில் கேது உள்ளதால் பிள்ளைகளின் பிடிவாதம் அதிகரிக்கும்.

**கன்னி** ராசி நாயகன் புதன் இம்மாதத்தில் 6, 7, 8 ஆகிய வீடுகளில் சஞ்சரிக்க உள்ளார். உடல் நலம் சீராகும். பணவரவில் குறையேற்பட வாய்ப்பில்லை. குடும்ப உறுப்பினர்களுடனும் குறிப்பாக வாழ்க்கைத் துணைவருடனும், தொழில் பங்குதாரர்களுடனும் சற்று அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.

**துலாம்** சுக்ரன், புதன் மற்றும் சனி ஆகியோரின் நிலை நன்றாக உள்ளது. திருமணம் விரைவில் கூடி வரும். நிர்வாகத் திறமை வெளிப்படும். அரசு வழி எதிர்ப்பார்த்த உதவி கிட்டும். அரசியலில் உள்ளவர்களுக்கு நற்பெயர் உண்டாகும். அலுவலகப் பணியாளர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவர்.

**விருச்சிகம்** மாத ஆரம்பத்தில் ராசி நாயகன் மூன்றில் உச்சமாக உலவிடுவது மிகவும் சிறப்பாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். சாகஸமான காரியங்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். உடன் பிறப்புகளால் அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு** ஆன்மீக மத நம்பிக்கைகள் அதிகரிக்கும். நாவன்மை சிறக்கும். பொருளாதார வசதிகள் பெருகும். மாணவர்களுக்குப் புத்திசாலித்தனம் பளிச்சிடும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தேவைக்கதிகமாகவே பொருள் சேரும். ஆடல், பாடல் போன்ற துறைகளில் பாராட்டப்படுவீர்கள்.

**மகரம்** மாத ஆரம்பத்தில் ஜன்ம ராசியில் ஏற்பட்டுள்ள கூட்டுக் கிரக யோகத்தால் மிகுந்த நன்மைகள் ஏற்பட உள்ளன. புதிய ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கை நிகழும். வசதிகளும், வாய்ப்புகளும் அதிகரிக்கும். பாராட்டுக்கள் குவியும். பணவரவு பெருகும். வங்கி இருப்பும் வைப்பு நிதியும் அதிகரிக்கும்.

**கும்பம்** பதினொன்றில் கேது உலவிடுவது விசேஷமாகும். ஐந்தில் ராகு உலவிடுவது சிலாக்கியமில்லை. பிள்ளைகள் வழியில் சில தொல்லைகளைச் சந்திக்க வேண்டி வரலாம். நான்கில் சுக்ரன் வலிமையாகச் சஞ்சரிப்பதால் நிலம், மனை, வீடு, வாகனம், தோப்பு, துரவு போன்ற சொத்துக்கள் வாங்கமுற்படுவீர்கள்.

**மீனம்** ராசி நாயகன் சனி, செவ்வாயுடன் லாபஸ்தானத்தில் உலவிட இம்மாதம் தொடங்குகிறது. தொழிலில் மேன்மையும், வளர்ச்சியும் உண்டாகும். மத ஈடுபாடு அதிகரிக்கும். கணிதம், எழுத்து, சட்டம், நீதி போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் & பின்கோடு எண் __________ [ | | | | | | ]

அலைபேசி எண் [ | | | | | | | | | | ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை
(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை
(டி.டி. எண்.) : தேதி:

இடம் :
நாள்: சந்தாதாரர் கையொப்பம்

---

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

## அஸ்வினி மருத்துவமனை பூஜையின்போது...



பிப்ரவரி 14, 2020 வெள்ளிக்கிழமை அன்று திருமலையில் நவீனமயமாக்கப்பட்ட அஸ்வினி மருத்துவமனை திறப்பு விழா நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் பங்கு கொண்டு பூஜைகளை செய்தார். பிறகு அவர் ஊடகத்தாரிடம் உரையாற்றும்போது, திருமலைக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் உள்ளூர் வாசிகளின் வசதிக்காக அப்போல்லோ, டாடா டிரஸ்ட் உதவியுடன் திருமலையில் அஸ்வினி மருத்துவமனையிலேயே மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவைகள் கிடைக்கும். இச்சேவையினை அனைவரும் உபயோகப்படுத்திக் கொள்ளும்படி கூறினார்.

## ஸ்ரீசைலம் ஆலயத்தில் பட்டுவஸ்திரம் சமர்ப்பித்தபோது...

பிப்ரவரி 17, 2020 திங்கட்கிழமை அன்று ஸ்ரீசைலம் பிரம்மராம்பிகை உடனுறை மல்லிகார்ஜுன ஸ்வாமிக்கு தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் அவர்கள் தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்தனர். இவர்களுக்கு ஸ்ரீசைலம் செயலாட்சித் தலைவர் திரு. கே.எஸ். ராமாராவ், அர்ச்சகர்கள் வரவேற்பு அளித்தனர்.





## ஸ்ரீகாளஹஸ்தி ஆலயத்தில் பட்டுவஸ்திரம் சமர்ப்பித்தபோது...

பிப்ரவரி 23, 2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சித்தூர் மாவட்டம் ஸ்ரீகாளஹஸ்தியில் நடைபெற்ற மகாசிவராத்திரி வருடாந்திர பிரம்மோத்ஸவத்தில் சிறப்பு வாய்ந்த கல்யாணோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீசோமஸ்கந்த மூர்த்தி, ஞானாம்பிகைக்கு தி.தி. தேவஸ்தானம் சார்பில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர், செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் தம்பதியினர் பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்தனர்

*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Dr. K. Radha Ramana****, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. R.V. Vijayakumar,*** *B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்
## திருப்பதி
# ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 28-05-2020 முதல் 05-06-2020 வரை



**28-05-2020**
**வியாழக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**29-05-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**30-05-2020**
**சனிக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**31-05-2020**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

**01-06-2020**
**திங்கட்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்


**02-06-2020**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**03-06-2020**
**புதன் கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**04-06-2020**
**வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**05-06-2020**
**வெள்ளிக்கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-03-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12-2018-2020, Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



அயோத்தியில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு மிக வைபவமாக பட்டாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஆட்சி புரிந்த காலத்தில் நாட்டு மக்கள் அனைவரும் எவ்விதத் துன்பமுமின்றி இன்பமுடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் ஆட்சியில் தர்மம் நான்கு பாதத்தில் நடந்தது. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி ஆட்சிக்குப் பின் வந்த அரசர்களுக்கு முன் மாதிரியாக இராம ராஜ்ஜியம் எனும் பெயர் யுகயுகமாய் நிரந்தரமாக நின்றது.